விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 050 வள்ளுவர் ஆண்டு 2056 தை 25 வெள்ளிக்கிழமை (07.02.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829






## லசந்த படுகொலை வழக்கு; ஊடகவியலாளர்கள் போராட்டம்



(கொழும்பு)
ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்டமை தொடர்பான வழக்கு விசாரணையில் சட்டமா அதிபரின் சிபாரிசுக்கு எதிர்ப்புத் தெரிவித்து இளம் ஊடகவியலாளர்கள் சங்கத்தால் 16

### கடன் திட்டத்தின் முன்னேற்றம் குறித்து
## ஐ.எம்.எப் பிரதிநிதிகளுடன் ஜனாதிபதி கலந்துரையாடல்



(கொழும்பு)
சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்பாடு எட்டப்பட்டுள்ள நீட்டிக்கப்பட்ட கடன் திட்டத்தின் முன்னேற்றம் குறித்து ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க 15

# 'நடுவே பாய வேண்டாம்'
# 'இங்கே சண்டித்தனம் கூடாது'
## பாராளுமன்றத்தில் நேற்று அமைதியின்மை

(கொழும்பு)

**பிரதி சபாநாயகரைப் பார்த்து 'நடுவே பாய வேண்டாம்' என்று எதிர்க்கட்சித் தலைவர் கூறியபோது அதற்கு சபை முதல்வர் எதிர்ப்புத் தெரிவித்து 'இங்கே சண்டித்தனம் கூடாது' எனத் தெரிவித்ததால் பாராளுமன்றத்தில் அமைதியின்மை ஏற்பட்டது.**

பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க கொலைச் சம்பவம் தொடர்பில் பிரதமரிடம் கேள்வியெழுப்பி உரையாற்றிக் கொண்டிருந்தபோது, சபைக்குத் தலைமை தாங்கிய பிரதி சபாநாயகர் மொஹமட் ரிஸ்வி சாலி, "உங்களது 27/2 இன் கீழ் உரையாற்றுங்கள்" எனத் தெரிவித்த போது, "நடுவே பாய வேண்டாம்" என்று கூறிவிட்டு தனது உரையை சஜித் தொடர்ந்தார்.

பின்னர் எதிர்க்கட்சித் தலைவரின் அந்த உரையைத் தொடர்ந்து எழுந்த சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க, "இந்த 16

## குளிர்காய்வதற்காக தீ மூட்டிய யுவதி மரணம்
### மன்னார் மடுவில் சம்பவம்

(மன்னார்)
குளிர்காய்வதற்காக மூட்டிய தீயில் எரிந்து தீக்காயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த யுவதி ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.
மன்னார் மடுப் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. 15

## பாராளுமன்றை விட்டு வெளியேற்ற நேரிடும்
### அர்ச்சுனாவை எச்சரித்த பிரதி சபாநாயகர்

(கொழும்பு)
சபையில் அமைதியற்ற முறையில் நடந்து கொண்ட யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மருத்துவர் இராமநாதன் அர்ச்சுனாவை சபையில் இருந்து வெளியேற்ற நேரிடும் என்று பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலி கடுமையாக எச்சரித்தார். 15

### ஈஸ்டர் தாக்குதல்
## எனக்கு எதுவும் தெரியாது
### கோட்டாபய

(கொழும்பு)
ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பில்எனக்குத் எதுவும் தெரி 15

## அரகலய போராட்டத்தின்போது தமது இல்லங்கள் சேதமடைந்ததாக தெரிவித்து
### நட்டஈடு பெற்ற 43 எம்.பிக்களின் பட்டியல் வெளியீடு


(கொழும்பு)
2022ஆம் ஆண்டு அரகலயப் போராட்டத்தின்போது தமது இல்லங்கள் சேதமடைந்ததாக தெரிவித்து நட்டஈடு பெற்றுக்கொண்ட 43 பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்ப் பட்டியல் மற்றும் அவர்கள் பெற்றுக்கொண்ட தொகை நேற்று பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது.

ஆளும் கட்சியின் பிரதம கொறடா அமைச்சர் டொக்டர் நலிந்த ஜயதிஸ்ஸவினால் இவை குறித்து சபையில் தெரிவிக்கப்பட்டவை முறையே,

கபில நுவன் அத்துகோரள - 5 இலட்சத்து 4 ஆயிரம் ரூபாய், விமலவீர திசாநாயக்க - 5 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய், கீதா குமாரசிங்க - 9 இலட்சத்து 72 ஆயிரம் ரூபாய், ஜனக்க திஸ்ஸ குட்டியாராச்சி - 11 16




## முப்படைத் தளபதிகள் ஜனாதிபதியுடன் சந்திப்பு



(கொழும்பு)
புதிய முப்படைத் தளபதிகள் நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில், ஜனாதிபதி அநுர குமார திஸா 15

## மகிந்த தாக்கல் செய்த வழக்கு 19ஆம் திகதி விசாரணைக்கு


(கொழும்பு)
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்ட பாதுகாப்புப் படையினரை 60 15

### வித்தியா படுகொலை வழக்கு
## மேல்முறையீட்டு மனுக்களை தொடர நீதிமன்றம் அனுமதி

(யாழ்ப்பாணம்)
2015 ஆம் ஆண்டு பள்ளி மாணவி சிவலோகநாதன் வித்யா கடத்தப்பட்டு, கூட்டு பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்ட வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட பிரதிவாதிகள், குற்றச்சாட்டுகளிலிருந்து தங்களை விடுவித்து, தண்டனையை இரத்துச் செய்யக் கோரி தாக்கல் செய்த மேல் முறையீட்டு மனுக்களை தொடர 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பழக்கடை வியாபாரிகள் மாநகர சபைக்கு எதிராக போராட்டம்



(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் செயற்பாட்டை கண்டித்து யாழ். மத்திய பேருந்து நிலைய வளாகத்தின் பின்புறமாக வைரவர் கோயில் வீதியில் உள்ள பழக்கடை வியாபாரிகள் போராட்டமொன்றை நடத்தியுள்ளனர்.

குறித்த போராட்டம், நேற்று(06) வியாபாரிகளின் கடைத் தொகுதியின் முன்றலில் இடம்பெற்றுள்ளது.

தங்களது கடைகளுக்கு முன்னால் அளவிடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் வியாபாரிகள் போராட்டத்தை முன்னெடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்காலிக கடைகளை அமைத்து பழங்களை விற்பனை செய்துவரும் குறித்த வியாபாரிகள், இந்த மனிதாபிமானமற்ற செயற்பாட்டால் தமது குடும்ப வருமானம் முழுமையாக மாநகர சபையினரால் பறிக்கப்படுவதாக சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேநேரம், வாழ்வாதாரத்தினை அடிப்படையாகக் கொண்டு கடைகளை அமைத்து ஏறக்குறைய 15 ஆண்டுகளுக்கும் மேலாக நாம் தொழிலில் ஈடுபட்டு வருவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (ம-7)

# லசந்த படுகொலை விசாரணை அவசியம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(கொழும்பு)

ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்கவின் படுகொலை தொடர்பில் அரசாங்கம் தலையிட்டு வெளிப்படையான விசாரணை நடத்த வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று பாராளுமன்றத்தில் வலியுறுத்தினார்.

லசந்த விக்ரமதுங்கவின் படுகொலைச் சம்பவம் தொடர்பில் எடுக்கும் நடவடிக்கைகள் குறித்து நான் கடந்த ஜனவரி மாதம் 8 ஆம் திகதி பிரதமரிடம் கேள்வி எழுப்பியிருந்தேன்.

இத்தகைய தருணத்தில், இது தொடர்பாக அண்மைக் காலமாக அரசாங்கம் எடுத்திருக்கும் நடவடிக்கைகள் என்ன?

இது தொடர்பாக வெளிப்படையான விசாரணையை நடத்தி, அவர்களது குடும்பத்தினருக்கும் ஊடகவியலாளர்களுக்கும் நீதி நியாயத்தை நிலைநாட்டி, கொலையாளிகளை சட்டத்தின் முன் நிறுத்த நடவடிக்கை எடுங்கள் என எதிர்க்கட்சித் தலைவர் இங்கு மேலும் தெரிவித்தார்.

மேலும் கொழும்பு துறைமுகத்தில் காணப்படும் கொள்கலன் பரிசோதனை நடவடிக்கைகளில் ஏற்படும் தாமதம் ஏற்றுமதி மற்றும் மீள் ஏற்றுமதி மூலம் அதிக வருமானம் ஈட்டும் எம்மைப் போன்ற நாட்டிற்கு நல்லதல்ல.

இது தொடர்பில், 'கட்டாயம் பரிசோதனைக்குட்படுத்த வேண்டும் என சிவப்பு முத்திரை' பொறிக்கப்பட்ட 323 கொள்கலன்களை விடுவித்தமையை யார் பொறுப்பேற்பது? ஏன் அவ்வாறு விடுவிக்கப்பட்டன என்றும் அரசாங்கத்திடம் அவர் கேள்வி எழுப்பினார். (ம-7)

# அர்ச்சுனா - அமைச்சர் சந்திரசேகர் பாராளுமன்றத்தில் வாய்த்தர்க்கம்

பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவிற்கும் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரிற்கும் இடையில் நேற்று வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர்,.தனது உரை நேரத்தின் போது அண்மையில் ஜனாதிபதி யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்தமை தொடர்பில் கருத்து தெரிவித்துக் கொண்டிருந்துள்ளார்.


இதன்போது, இடையில் பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா, குறுக்கிட்டுப் பேசிய போது, இருவருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், உங்களை போல், முகப்புத்தகத்தில் அனைத்தையும் பகிர்ந்து கொண்டு எங்களாலும் படம் காட்ட முடியும். ஆனால் நாங்கள் அதை செய்வதில்லை என சந்திரசேகர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் அவர், தனக்கான உரை நேரத்தை பெற்று கொண்டு பின்னர் உரையாற்றுமாறும் அவர் அர்ச்சுனாவை வலியுறுத்தியுள்ளார்.

மேலும், எதிர்கட்சித் தலைவரிடம் உங்களுக்கான நேரத்தை பெற்று கொண்டு பேசுங்கள் எனவும் கூறியுள்ளார்.(ம-7)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



கடந்த 08.01.2025 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்த எம் குடும்பத் தலைவன்,

அமரர்

## அல்பிரட் நவரத்தினம் சின்னத்துரை

அவர்கள் எம்மை விட்டு நினையாப் பிரகாரம் பிரிந்த வேளை எமது இல்லம் வந்து எமக்கு பற்பல உதவிகள் புரிந்து ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் மற்றும் எம்முடன் துயர் பகிர்ந்த பாடசாலைஅதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், கா/ பெற்றோலியம் கூட்டுத்தாபனம், Nuffield பாடசாலை, வவுனியா தபாலகம், திருமறைக் கலாமன்றம் சார் அனைவருக்கும், இணையத்தளம், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்கள், மலர் வளையங்கள், பதாகைகள் மூலம் தம் இரங்கலைத் தெரிவித்தவர்களுக்கும் மேலும் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக எமது இல்லம் வந்து செபித்த அருட் தந்தையர், அருட்சகோதரிகளுக்கும், இறுதி அடக்க வழிபாட்டை மேற்கொண்ட யாழ். நகர், நவாலி சிற்றி மிஸன் அருட் பணியாளர்கள் அனைவருக்கும் மற்றும் நன்றி கூறத் தவறியவர்களுக்கும் எம் குடும்பம் சார்பில் நெஞ்சம் நிறைந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

(C-2213)

இல.63, மருதடி வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

மனைவி திருமதி P.F சின்னத்துரை
குடும்பத்தினர்

# வட்டுக்கோட்டையில் பெண்ணிடம் ரூ. 50 ஆயிரம் கொள்ளை

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாவடி பகுதியில் தனியாக வசித்து வரும் வயோதிபப் பெண் ஒருவரின் 50 ஆயிரம் ரூபா பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்

மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவர் குறித்த வீட்டுக்குச் சென்று, தான் கமநலசேவை திணைக்களத்தில் இருந்து வருவதாகவும், விவசாய அழிவுக்கு நட்ட ஈடாக குறித்த பெண்ணுக்கு 2 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், அந்தப் பணத்தை பெறுவதற்கு 50 ஆயிரம் ரூபா செலுத்த வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

இந்நிலையில் உண்மையறியாத அந்த வயோதிபப் பெண் 50 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளார்.

தான் ஏமாற்றப்பட்ட விடயம் பின்னர் தெரியவந்த நிலையில் இது குறித்து வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார். குறித்த சந்தேகநபரை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)


காணி உடன் விற்பனைக்கு


காங்கேசன்துறை (KKS) நகுலேஸ்வரா வீதியில் பஸ் ஓடும் வீதி முகப்புடன் நிலப்பரப்பு 10 காணி உடன் விற்பனைக்கு உண்டு

வீடுகள், களஞ்சிய அறைகள்,கடைகள், யாட் கட்டுவதற்கு உகந்த இடம்.

076 4499 868

(3350)


# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 02.08.1951 மறைவு 05.02.2025

எமது பிரதேச செயலக சாரதியாகக் கடமையாற்றும் திரு த.நரேந்தன் அவர்களுடைய அன்புத் தந்தையார்

அமரர் சின்னத்தம்பி தர்மகுலசிங்கம்

அவர்கள் 05.02.2025 அன்று காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவுத்துயருடன்... பிரதேச செயலாளரும்,
அனைத்து உத்தியோகத்தர்களும்,
ஊழியர் நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம், பருத்தித்துறை.

(C-2211)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25 ஆவது பிறந்த தின நினைவலைகள்

அமரர்.

## சண்முகநாதன் சந்துதன்

மலர்வு 07.02.2000

உதிர்வு 08.09.2009





**அன்புத்தெய்வமே சந்து அண்ணா!**

இன்று இப் புவிதனில் நீங்கள்
வந்துதித்து 25 ஆண்டுகள்
நிறைவானதுவோ!
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும்
உங்கள் நினைவுகள் என்றும்
எம்மைவிட்டு நீங்காது பசுமரத்து
ஆணிபோல உள்ளது. உங்களுடன்
வாழ நாங்கள் கொடுத்துவைக்கில்லை
என்றாலும் நீங்க பாவித்த பொருட்கள்,
அணிந்த உடைகள், புத்தகங்கள்
எல்லாம் பொக்கிஷமாக எங்கள் வீட்டில்
உள்ளது அண்ணா!
உங்கள் கதைகளை அம்மா சொல்லக்
கேட்டு மகிழ்ந்தோம். அறியாத வயதில்
உங்களை இழந்துவிட்டோம். நீங்கள்
எம் பெற்றோருடன் இன்பமாக துயில்
கொள்கிறீர்கள் ஆனால் நாங்களோ
உங்கள் மூவர் நினைவிலும்
தவிக்கின்றோம். எப்போ உங்களைக்
காண்போம் என துயிலும் இடம் நாடிச்
சென்று வருகின்றோம் எங்களை காண
எப்போ வருவீர்கள் அண்ணா!
உங்கள் அன்பு முகம் எப்போதும்
எம்மை விட்டு நீங்காது
நிலைத்திருக்கும் என்றும்....



*பிறந்தநாள் வாழ்த்துக்கள் அண்ணா.*

**"சண்முகநாதம்"**
**கட்டைப்பாலி லேன்,**
**ஆனைக்கோட்டை.**

உங்கள் பிரிவால் வாடும்
**அன்புச் சகோதரர்கள்**
**தேவசந்துதன், தேவசாத்வீகன்**
**மற்றும் உறவுகள்.**

(815)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## "இந்துக்களின் சமர்" இன்று

## யாழ்.இந்துவில் ஆரம்பம்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி-கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரிகளுக்கு இடையிலான 14 ஆவது வருடாந்த "இந்துக்களின் சமர்" என வர்ணிக்கப்படும் கிரிக்கெட்போட்டி இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ள இப் போட்டியானது நாளை சனிக்கிழமை வரை இடம்பெறவுள்ளது.

கடந்த வருடம் இடம் பெற்ற போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8)

## சம்பியன் டிராபி போட்டி

## இந்தியா-பாக், மோதலுக்கு மவுசு



சம்பியன்ஸ் டிராபி தொடரில் இந்தியா பாகிஸ்தான் பங்கேற்கும் போட்டிகளுக்கான டிக்கெட் சில நிமிடத்தில் காலியானது.

பாகிஸ்தானில் ஐ.சி.சி. சம்பியன்ஸ் டிராபி தொடர் எதிர் வரும் 19 ஆம் திகதி நடக்க உள்ளது.

கடந்த 2023 உலகக் கோப்பை தொடரில் "டாப்-8" இடம் பிடித்த இந்தியா, அவுஸ்திரேலியா, தென் ஆபிரிக்கா உள்ளிட்ட அணிகள் பங்கேற்க உள்ளன. இலங்கை, வெஸ்ட் இண்டீஸ் இதற்குத் தகுதி பெறவில்லை.

பாதுகாப்புக் காரணங்களால் பாகிஸ்தான் செல்ல இந்தியா மறுத்தது. இந்திய அணி பங்கேற்கும் போட்டிகள் மட்டும் டுபாயில் நடக்க உள்ளன.

இதில் பங்களாதேஷ் (பெப். 20), பாகிஸ்தான் (பெப். 23), நியூசிலாந்து (மார்ச் 2) அணிகளை சந்திக்க உள்ளது. இதற்கான டிக்கெட் விற்பனை ஒன்லைன் வழியாக முன்னெடுக்கப்பட்டு இருந்தது.

இதில் இந்தியா, பாகிஸ்தான் மோதலுக்கான டிக்கெட் விற்பனை தொடங்கிய சில நிமிடத்தில் விற்றுத் தீர்ந்தன. 25,000 ஆயிரம் டிக்கெட்டு களை வாங்க 1,50,000 இற்கும் மேற் பட்ட ரசிகர்கள் ஒன்லைனில் காத்திருந்தனர்.

இதனால் ஒரு மணி நேரம் தாமதம் ஆனது. பிளாட்டினம் டிக்கெட் ரூ. 48,000, கிராண்ட் பிரிவு டிக்கெட் ஒன்று ரூ 1.8 லட்சத்துக்கு விலை போனது.

அதேவேளை இந்தியா-பங்களாதேஷ், இந்தியா-நியூசிலாந்து போட்டிக்கான டிக்கெட்டுகளை வாங்கவும் கடும் போட்டி நிலவுகின்றமை குறிப்பிடத்தக்கது. (6-8)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3286


### நிலானி




### மதுஷா




### கபிலா





### பதுமிதன்




### லதுசன்




### நிதுசன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தென்னைச் செய்கையாளர்களே! தென்னையினை அழிக்க மீண்டும் பீடை வந்து விட்டது அது தான் தென்னை வெள்ளை ஈ (Coconut White Fly) தேங்காய் விலை ஏற்றத்தினை தடுக்க உடன் செயற்படுங்கள்

இலங்கையில் தென்னைகளினைத் தாக்கி விளைச்சலினைக் குறைத்து மரத்தினையே படச் செய்யும் புதிய பீடையான தென்னை வெண் ஈ பரவி வருகின்றது. குறிப்பாக யாழ்.மாவட்டத்தில் வேகமாகப் பரவுகின்றது. இதனை உடன் கட்டுப் படுத்துங்கள். இல்லையேல் தேங்காய் உற்பத்தி பாரிய அளவில் பாதிக்கப்படும்.

இலங்கையில் பல வருடங்களாக தென்னைச் செய்கையினைப் பாதிக்கும் 'மைற்' பீடையினைத் தொடர்ந்து தென்னை வெண் ஈ 2019 ஆம் ஆண்டில் முதல் முதலாக கேகாலை மாவட்டத்தில் இனங் காணப்பட்டது. பின்பு குருநாகல், கண்டி, மாத்தறை, இரத்தினபுரி, புத்தளம், அம்பாந்தோட்டை மாவட்டங்களுக்குப் பரவியது. 2021 ஆம் ஆண்டு குறிப்பிட்ட மாவட்டங்களில் கூடுதலாக தாக்கத்தினை ஏற்படுத்தியது.


முதிர் வெண் ஈ பெண் (Rugose)

இந்தப் புதிய பீடையானது யாழ். மாவட்டத்தில் 2022 ஆம் ஆண்டு பிற்பகுதியில் பரவத் தொடங்கி 2024 (பெப்ரவரி) மிகவும் வேகமாக பரவிக் கொண்டிருந்தது. மீண்டும் கடந்த ஜனவரி 2025 இல் தாக்கத்தினை ஆரம்பித்துள்ளது. இந்தத் தென்னை வெண் ஈ இன் பிறப்பிடம் அமெரிக்காவிலுள்ள புளோரிடா மாகாணம் ஆகும். 2016 ஆம் ஆண்டு இந்தியாவின் தமிழ் நாட்டிலுள்ள கோவை மாவட்டதில் தொடங்கி கேரளா வரை பரவியது. இதன் பின்பு தற்சமயம் இலங்கைக்கும் வந்து விட்டது.

முக்கியமாக வெண் ஈ ஆனது பல இனங்களாக வகைப்படுத்தலாம். தென்னை மட்டுமல்லாது ஏனைய பயிர்களையும் தாக்கி சேதத்திற்குள்ளாக்கும்.

ஆனால் இலங்கையில் தென்னையில் சேதத்தினை விளைவிப்பது இரு இனங்கள் என தென்னை ஆராய்ச்சி நிலையத்தினர் கண்டுபிடித்துள்ளனர்.

1. Rugose spiraling- (றூகோஸ்)
2. Aleurodicuscucuis- (அலேயுரோடிக்கஸ்)

### தாக்கத்தின் அறிகுறிகள்

தென்னை வெண் ஈ தென்னோலையின் அடிப்பகுதியில் பச்சையத்தினை (குளோ ரோபில்) உண்டு தாக்கத்தினை ஏற்படுத்துவதனால் நாளடைவில் தென்னோலை கருகிய தோற்றமளிக்கும். இதன் கழிவு தெனனோலையின் கீழ்ப் பகுதியில் விழுவதனால் கறுப்பு நிறமாகும். இதன் விளைவாக கறுப்பு பங்கசு தாக்கமும் ஏற படுகின்றது.

தென்னோலையின் கீழ்ப்பகுதியில் வெண் ஈ திரவத்தினைச் சுரந்து முட்டைகள் இடுவதனால் முட்டைகள் ஓலையில் ஒட்டிக்கொள்ளும். கூடுதலாக செவ்விளநீர், கலப்பின (Hybrid) இனங்களில் அதிகளவு தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது.

கீழே இருந்து தென் னையின் வட்டுப் பகுதியினைப் பார்க்கும் போது கண்ணில் தென்படத்தக்கதாக சிற்றோலைகளில் பனிப்படலம் படர்ந்தது மாதிரி வெண்மையாகத் தோற்றமளிக்கும். இரவு 7 மணியிலிருந்து 11 மணிவரை தான் தாக்கத்தின் உச்சக்காலம் ஆகும். இந்நேரத்தில் தென்னை மரத்தின் கீழ் இருந்து ரோச் லைட் வெளிச்சத்தினைப் பாய்ச்சினால் மிகவும் துலக்கமாக அதன் தாக்கம் தெரியும் (அனுபவ உண்மை).

இத் தாக்கத்தினால் தேங்காய் விளைச்சலில் அதிக பாதிப்பு ஏற்படும்.

தென்னை வெண் ஈ தென்னையின் அடிப்பகுதியில் சுருள் சுருளாக முட்டையிட்டு பெருகும் போது பச்சைய இழப்பு ஏற்படுவதனால் உணவு உற்பத்தி (ஒளித்தொகுப்பு) பாதிக்கப்பட்டு மரம் இறப்பதற்குச் சந்தர்ப்பம் உண்டாகும்.


### கட்டுப்பாட்டு முறைகள்

1. Power sprayer (வலுத்தெளி கருவி மூலம்) உயர் அமுக்கத்தில் மரத்தின் கீழ்பகுதியிலிருந்து மேல் நோக்கி தென்னைச் சிற்றோலைகளில் படத்தக்கவாறு தண்ணீரை விசிறவும். இதனால் வெண் ஈ முட்டைகள் பருவ நிலைகள் எல்லாம் கழுவப்பட்டுத் தாக்கம் குறையும்.

2. தென்னை ஆராய்ச்சி நிலைய சிபாரிசின் படி
வேப்பெண்ணை- 10 மில்லி லீற்றர்
சோப் பவுடர்- 5 கிராம்
தண்ணீர் - 1 லீற்றர்
இந்த அளவுப் பிரமாணத்தில் மூன்றையும் கலந்து தேவையான அளவு மரத்திற்கேற்ப வலுத்தெளி கருவி மூலம் ஓலையின் அடிப்பகுதிக்குப் படத்தக்கவாறு விசிறவும்.

3. பஞ்ச காவியத்தினை 3 லீற்றர் எடுத்து 10 லீற்றர் தண்ணீரில் விசிறலாம்,


ஜெ.சத்தியேந்திரன்
ஓய்வு நிலை உதவிப் பிராந்திய முகாமையாளர்,
தென்னைப் பயிர்ச்செய்கை சபை,
யாழ்ப்பாணம்.



அதன் வாழ்க்கை வட்டம்

4. வெறுமையான 1 லீற்றர் தண்ணீர் போத்தலில் சிறிதளவு நெத்தலிக் கருவாட்டுத் தூளினை அதற்குள் இட்டு 1லீற்றர் தண்ணீரில் கலந்து மூடிப் பகுதியில் கீழாக சிறிதளவு இடைவெளி விட்டு மூடாமல் தென்னோலை மட்டைகளில் கட்டித் தொங்க விட வேண்டும். இது ஒரு இனக்கவர்ச்சிப் பொறி முறையாகும். 1 ஏக்கர் தென்னந்தோட்டத்திற்கு 15-20 போத்தல் போதுமானது.

5. தேவையற்ற காய்ந்த மட்டைகளை வெட்டிவிடவும்.

6. 5அடி X 1 1/2 அடி நீள, அகலமுள்ள மஞ்சள் பொலித்தீனை வாங்கி தென்னையினைச் சுற்றி (அடியிலிருந்து 7அடிக்கு மேலே) கட்டி விடவும். அதன் மேற்பரப்பில் கிறிஸ் பூசி விடவும்.

7. தென்னை ஆராய்ச்சி நிலையத்தினருடன் கதைத்த போது உயிரினவியல் கட்டுப்பாட்டு முறை பற்றி ஆராய்ச்சி நடைபெற்று கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

8. இரசாயன பூச்சி நாசினிகள் பாவிப்பதனை முயன்றளவு தவிர்க்கவும்.

உடன் ஆலோசனைகளுக்கு தொடர்பு: 077 505 6263

# இராசிபலன்

07.02.2025
தை 25 வெள்ளிக்கிழமை
தசமி முன்னிரவு 11.36 மணிவரை


ரோகிணி முன்னிரவு 8.47 மணிவரை
சுபநேரம் 6.35-8.05 மணிவரை
இராகுகாலம் 11.05-12.35 மணிவரை

சந்திராஷ்டமம் - சுவாதி, விசாகம்


வளவன்


மேஷம்

எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக செயற்படுவீர்கள், குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும் நாள், வாக்கு மேன்மையுண்டு.


இடபம்


எந்தவொரு வேலையையும் நாளையென தள்ளி வைக்காமல் இன்றே செய்து முடிப்பீர்கள், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள்.


மிதுனம்


நண்பர்கள் தொடர்பான வேலைகளுக்காக சற்று அலைய நேரிடலாம், விரயங்கள் ஏற்படாதிருக்க விழிப்புணர்வு அவசியம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.


கடகம்


பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் கைகூடும், வருமானம் பெருகி வளம் காணும் நாள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகம் பெறுவீர்கள்.


சிம்மம்


தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், உற்சாகத்துடன் செயற்பட்டு பலரது பாராட்டுக்களையும் பெறுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.


கன்னி


பற்றாக்குறை தீர்ந்து பணவரவும் கிடைக்கும் நாள், தொழிலில் போட்டிகள் மாறும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர்.


துலாம்


பொது வாழ்வில் வீண் பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், வரவும் செலவும் சமமாகும் நாள்.


விருச்சிகம்


பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பொது வாழ்வில் கௌரவம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.


தனுசு

இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாகச் செயற்படுவர், அடுத்தவர்கள் மீதான அக்கறை கூடும்.


மகரம்

உள்ளம் மகிழும் விதத்தில் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், மறைமுகப் போட்டிகள் மாறும்.


கும்பம்

தொழில் முயற்சியில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும், புண்ணிய காரியங்களுக்கு செலவு செய்து மகிழ்வீர்கள், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள்.


மீனம்

உடன் பிறப்புக்களின் ஆதரவு பெருகும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், வழிபாட்டில் ஆர்வம் கூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

நட்பை விலைக்கு வாங்க முடியாது தகுதியானவர்களுக்கு இலவசமாகவே வழங்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபூமி அறக்கட்டளையால் யாழ்.போதனாவுக்கு கட்டில்கள்



(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் புதிதாக திறக்கப்பட்ட மகப்பேற்று விடுதிக்கு 14 புதிய கட்டில்கள் சிவபூமி அறக்கட்டளையினால் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறு திரு முருகன் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வருகை தந்து, மேற்படி கட்டில்களை 18 ஆம் இலக்க மகப்பேற்று விடுதியில் வைபவ ரீதியாக கையளித்தார். (6-8)

# யாழ்.அரச அதிபரை சந்தித்த உலக வங்கியின் குழுவினர்



(யாழ்ப்பாணம்)

உலக வங்கியின் இலங்கை மற்றும் மாலைதீவிற்கான சிரேஷ்ட பொருளியலாளர் அன்ரனி ஓபேசேகரா தலைமையிலான குழுவினர் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபனை நேற்று முன்தினம் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினர்.

இச் சந்திப்பில் உலக வங்கி குழுவினர் யாழ். மாவட்டத்தின் தற்போதைய சமூக, பொருளாதார முன்னேற்ற நிலைமைகள், மீள்குடியேற்ற நிலைமைகள், சுற்றுலாத்துறை மேம்பாடு மற்றும் இளைஞர் யுவதிகளின் வேலையில்லாப் பிரச்சினைகள் போன்ற விடயங்களை அரசாங்க அதிபரிடம் கேட்டறிந்து கொண்டனர். (6-8-33)

# கலைத்தூது அழகியல் கல்லூரியின் பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியின் 14 ஆவது பரிசளிப்பு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு இல.286,பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் அதிபர் திருமதி மேரி அஞ்சலா அல்போன்சஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி சி.ரகுராம், சிறப்பு விருந்தினராக யாழ். கல்வி வலய நடனப் பாட ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர் திருமதி பத்மினி செல்வேந்திரகுமார் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் மாணவர்களின் பல்வேறு கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (6-8)

# பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கத்தின் 73 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கல்வியன்காட்டு சட்டநாதர் சிவன் கோயில் பின்புறமாகவுள்ள திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் இரத்தினராஜா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண தொழில் திணைக்கள ஆணையாளர் நாகேந்திரன் கலந்து கொள்ளவுள்ளார். (6-8)

# சீரணி ஸ்ரீநாகபூசணி அம்பாள் ஆலய மஹா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் திருவருள் மிகு சீரணி ஸ்ரீ நாகபூசணி அம்பாள் தேவஸ்தான புனராவர்த்தன அஷ்டபந்தன சமர்ப்பண உத்தமோத்தம த்ரயத் திரும்சத் (33) குண்டபஷ மகா யாக பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்-2025 எதிர்வரும் 10, ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.35 மணி முதல் 10.15 மணிவரையுள்ள சுபவேளையில் இராஜ கோபுரங்களுக்கும் அன்னை ஸ்ரீ நாகபூசணி அம்பாளுக்கும் மற்றும் பரிவாரமூர்த்திகளுக்கும் புனராவர்த்தன பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழா வேத ஆகம முறைப்படி சிறப்புற நடைபெறவுள்ளது.

இந்நிலையில் நாளை மற்றும் நாளைமறுதினம் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது என ஆலய தர்மகர்த்தா சபையினர் அறிவித்துள்ளனர். (நி-6-8)

# 442 கிலோ புளியுடன் நால்வர் பூநகரியில் கைது

(சாவகச்சேரி)

பூநகரி வெட்டுக்காட்டுப் பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை 442கிலோகிராம் புளியுடன் நான்கு சந்தேக நபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.



மேற்படி புளி இந்தியாவில் இருந்து கடல்வழி மூலமாக எடுத்து வரப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

இராணுவப் புனாய்வுப் பிரிவினரால் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு பூநகரிப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (6-8-30)

# ரலண்ட் ஷோ

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துக் கல்லூரி மாணவர்களின் "ரலண்ட் ஷோ" எனும் நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வரலாற்றில் முதல் முறையாக தேசிய மட்டத்தில் வெற்றியீட்டிய யாழ். இந்து மாணவர்களின் தமிழ் மற்றும் ஆங்கில நாடகங்களுடன் பல்வேறு இசை நிகழ்சிகளும் நடைபெறவுள்ளன. (6-8)

# வீதித்தடை தொடர்பில் மாநகரசபையின் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி ஆலய தெற்குப் பக்கமாக கோயில் வீதியில் அமைக்கப்பட்டிருக்கும் கைலாச பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையிலுள்ள நல்லூர் தெற்கு வாயில் அலங்கார வளைவானது எதிர்வரும் 11 ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளது.

இதன்காரணமாக வேலைகளைப் பூரணப்படுத்துவதற்கு ஏதுவாக எதிர்வரும் 9, 10, 11 ஆகிய தினங்களில் கைலாசப் பிள்ளையார் கோவிலிலிருந்து நல்லூர் செட்டித்தெரு குறுக்கு ஒழுங்கை வரைக்குமான பகுதி வாகனப் போக்குவரத்திற்குத் தடை செய்யப்பட்டுள்ளது.

எனவே இவ் வீதியினைப் பயன்படுத்துவோர் மாற்றுப் பாதையினைப் பயன்படுத்துமாறு யாழ்.மாநகரசபை ஆணையாளர் அறிவித்துள்ளார். (6-8)

# போதனா மருத்துவமனையின் தேவைப்பாடு தொடர்பில் ஆராய்வு



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் மற்றும் யாழ்.போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தலைமையிலான குழுவினருக்கும் இடையிலான சந்திப்பு போதனா மருத்துவமனையில் மருத்துவமனைப் பணிப்பாளரது அறையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

யாழ்.போதனா மருத்துவமனையை தேசிய மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவதன் அவசியம் மற்றும் ஆளணி வெற்றிடங்கள் நீண்டகாலமாக மீளாய்வு செய்யப்படவில்லை என்பதுடன் ஏனைய மருத்துவமனைகளுடன் ஆளணிகளை ஒப்பிட்டு போதனா மருத்துவமனைக்கான ஆளணியின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டியதன் தேவைப்பாடுகளையும் மருத்துவமனைப் பணிப்பாளர் ஆளுநருக்கு எடுத்துக் கூறியிருந்தார்.

மேலும் போதனா மருத்துவ மனையின் சேவைகளை திறம்பட மேற்கொள்வதற்கும் நீண்ட கால நோக்கிலான 10 மாடியிலான புதிய கட்டடத்தின் தேவைப்பாடுகளையும் அதற்கான வரைபடத்தையும் ஆளுநருக்குக் காண்பித்து போதனா மருத்துவமனைப் பணிப்பாளரால் விளக்கமளிக்கப்பட்டது. இதன்போது இதற்கான நிதியைப் பெற்றுத்தருமாறும் ஆளுநரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. (6-8)

# காணாமல் போன மோ.சைக்கிள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணிப் பகுதியில் சில மாதங்களுக்கு முன்பு காணாமல் போன மோட்டார் சைக்கிள் ஒன்று நேற்று பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

வெற்றிலைக்கேணியை சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவரின் மோட்டார் சைக்கிளே நித்திய வெட்டை காட்டுப் பகுதியில் இருந்து மருதங்கேணி பொலிஸாரால் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை.

மீட்கப்பட்ட மோட்டார் சைக்கிளை நீதிமன்றில் முற்படுத்த மருதங்கேணி பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்று மாசுபாட்டால் இறப்பு எண்ணிக்கை அதிகரிப்பு

## சுவாச மருத்துவர்கள் சங்கம்

(கொழும்பு)

**காற்று மாசுபாட்டால் ஏற்படும் பல்வேறு நோய்களால் உலகளவில் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக சுவாச மருத்துவர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.**

இது குறித்து சுவாச மருத்துவர்கள் சங்கத்தின் தலைவர் மருத்துவர் நெரஞ்சன் திசாநாயக்க கருத்துத் தெரிவிக்கையில் "காற்று மாசுபாட்டினால் ஏற்படும் சுவாச நோய்களால் உலகளவில் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 7 மில்லியன் மக்கள் உயிரிழப்பதாக ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன.

காற்று மாசுபாடு முறையாக நிர்வகிக்கப்படாவிட்டால், அது பொருளாதார ரீதியாகவும் தாக்கங்களை ஏற்படுத்தக்கூடும்.

சுமார் 70,000 அறிவியல் ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வுகள், காற்று மாசுபாட்டால் 7 மில்லியன் மக்கள் அகால மரணம் அடைவதை நிரூபித்துள்ளன.

குறிப்பாக காற்றில் உள்ள சில கூறுகள் நுரையீரலுக்குள் நுழையும் போது, புற்றுநோய் பாதிப்பு அதிகரிக்கிறது. புகைப்பிடிப்பவர்களில் இந்த நிலை காணப்பட்டாலும், புகைபிடிக்காதவர்கள் மற்றும் பெண்களில் காற்று மாசுபாடு அதிகரித்து வருவதும் இப்போது கண்டறியப்பட்டுள்ளது" இவ்வாறு மருத்துவர் நெரஞ்சன் திசாநாயக்க தெரிவித்துள்ளார். (நி-8)

## மேய்ச்சல் தரவை இன்மையால் இறந்து போகும் கால்நடைகளின் அவலநிலை!





(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் மாந்தை மற்றும் நானாட்டான் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் அண்மைக் காலமாக அதிகளவான கால்நடைகள் மேய்ச்சல் தரவைகள் இன்றி இறந்து போயுள்ளன.

குறிப்பாக நாயாற்று வெளி பகுதியில் அதிகளவான கால்நடைகள் மேய்ப்பதற்காக கொண்டு செல்லப்படுகின்ற நிலையில் சீரற்ற காலநிலை, அதிக பனி மற்றும் அதிகளவான மாடுகள் ஒரே பகுதிகளில் மேய்வதால் பட்டினியால் உடல் மெலிந்து மாடுகள் இறந்துள்ளமை அடையாளம் காணப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் வாழ்வாதாரத்தை இழந்த நிலையில் கால்நடை மேய்ப்பாளர்கள் பல்வேறு இழப்புக்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இருப்பினும் மன்னார் மாவட்ட செயலகத்தினால் மேய்ச்சல் தரவைக்கு எனப் பல வருடங்களுக்கு முன் ஒதுக்கப்பட்ட பல ஏக்கர் காணிகள் விடுவிக்கப்படாத நிலையில் பொருத்தமற்ற இடங்களில் மேய்ச்சல் நடவடிக்கைகளுக்கு கால்நடைகளை கொண்டு செல்வதால் இவ்வாறன மரணங்கள் இடம் பெற்று வருவதாக கால்நடை மேய்ப்பாளர்கள் கவலை தெரிவித்தனர். (6-8-285)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/கைதடி சேதுகாவலர் வித்தியாலயத்தில் 2024 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் சித்தியடைந்தோர்.



ச.மகரிசன் 150 புள்ளிகள்



சு.ரிஸ்மிதா 150 புள்ளிகள்



க.கனிஸ்ரன் 148 புள்ளிகள்



க.சஜீனா 142 புள்ளிகள்

70 புள்ளிகளுக்கு மேல் 11 மாணவர்கள் சித்தி வீதம் 85%. இம் மாணவர்களையும் வழிப்படுத்திய அதிபர், ஆசிரியர்களையும் தரம் 5 இல் கல்வி கற்பித்த செல்வி.த.சோபிதா ஆசிரியர் அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: பழைய மாணவர், யா/கைதடி சேதுகாவலர் வித்தியாலயம்.

Congratulations

(C-2208)


# 11 லீற்றர் கசிப்புடன் யாழில் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆறுகால்மடம் பகுதி யில் 11 லீற்றர் கசிப்புடன், நீண்ட காலமாக கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட சந்தேகநபர் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், யாழ். பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பிரிவினரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

மேலதிக விசாரணைகளின் பின்னர் அந்நபரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (6-8)

# பொது அறிவித்தல்

வலிகாமம் வடக்கு **J/241** வறுத்தலைவிளான் கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள வல்லை தெல்லிப்பளை அராலி வீதியில் ஆரம்பித்து மாவிட்டபுரம் மயிலிட்டி வீதியில் முடிவடையும் சபையின் பதிவேடுகளில் வறுத்தலைவிளான் பிள்ளையார் கோவில் வீதியென பதிவுசெய்யப்பட்ட வீதியின் பெயரை **"வித்துவ சிரோமணி பிரமஸ்ரீ சி.கணேசையர் வீதி"** பெயர்மாற்றம் செய்யப் பொதுமக்கள் கோரிக்கை சமர்ப்பித்துள்ளனர். இவ் வீதி பெயர்மாற்றம் செய்வது தொடர்பில் ஆட்சேபணைகளேதுமிருப்பின் எதிர்வரும் 2025.02.21 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் தபாலிலோ அல்லது நேரடியாகவோ செயலாளர், வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை, கொல்லங்கலட்டி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**அ.சுதர்சன்,**
**செயலாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை,**
**காங்கேசன்துறை.**

(3344)

## வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை படவரைஞர்களைப் பதிவு செய்தல் மற்றும் புதுப்பித்தல்-2025

2024.12.06 ஆம் திகதிய வலம்புரிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதற்கமைவாக 2025 ஆம் ஆண்டிற்கு படவரைஞராகப் பதிவு செய்வதற்கு கோரப்பட்ட தகைமைகளுக்கு மேலதிகமாக NVQ Level 4 in Drafting Technology (Building) கற்கைநெறிக்கான சான்றிதழ்களுடன் NVQ Level 5 in Drafting Technology (Building) கற்கை நெறியினை தற்போது பயின்று கொண்டிருப்பவர்களும் உரிய உறுதிப்படுத்தல் கடிதத்துடன் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியும். மேலும் விண்ணப்ப இறுதித்திகதி 2025.02.28 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

**செயலாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை.**

(C-2209)

## தனியார் நிறுவனங்களூடான

# பட்டப்படிப்புகள் தொடர்பில் விசேட கவனம்-கல்வி அமைச்சர்

(கொழும்பு)

தனியார் நிறுவனங்கள் ஊடாக வழங்கப்படும் பட்டப்படிப்பு தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. வெகுவிரைவில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதமரும் கல்வி அமைச்சருமான கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வில் வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையின்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இலங்கையில் கொழும்பு பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், பேராதனை பல்கலைக்கழகம் மற்றும் திறந்த பல்கலைக்கழகம் ஆகிய நான்கு அரச பல்கலைக்கழகங்கள் ஊடாக சட்டமாணி பட்டப்படிப்பு வழங்கப்படுகிறது.

2020ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் கொழும்பு பல்கலைக்கழகத்தில் 740 பேர் சட்டமாணி பட்டப்படிப்பையும், பேராதனை பல்கலைக்கழகத்தில் 197 பேர் சட்டமாணி பட்டப்படிப்பையும், யாழ்ப்பாணம் பல்கலைக்கழத்தில் 212 பேர் சட்டமாணி பட்டப்படிப்பையும், திறந்த பல்கலைக்கழகத்தில் 1625 பேர் சட்டமாணி பட்டப்படிப்பையும் பூர்த்தி செய்துள்ளனர்.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் சட்ட பீடத்தை ஸ்தாபிப்பதற்கான பரிந்துரைகளை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு முன்வைக்கப்பட்டு தற்போது தரவு கட்டமைப்புக்கள் மீளாய்வு செய்யப்படுகின்றன. வெகு விரைவில் புதிய சட்டபீடம் ஸ்தாபிக்கப்படும்.

சட்டக் கல்லூரி கல்வி அமைச்சின் விடயதானத்துக்குள் உள்ளடங்காது. சட்டக் கல்லூரி சுயாதீன முறையில் செயற்படுகிறது. ஒரு சில தனியார் நிறுவனங்கள் எவ்விதமான கொள்கை மற்றும் கண்காணிப்புக்கள் ஏதும் இல்லாமல் செயற்படுகின்றன. பட்டங்களும் வழங்கப்படுகின்றன.

ஆகவே இவ்வாறு செயற்படும் நிறுவனங்கள் தொடர்பில் உயர்கல்வி அமைச்சு மட்டத்தில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. வெகு விரைவில் அறிக்கை சமர்ப்பிக்கப்படும் எனத் தெரிவித்தார். ( நி-8)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## அமெரிக்காவைத் தொடர்ந்து விலகியது இஸ்ரேல்

### வெளியான அதிரடி அறிவிப்பு



(ஜெருசலேம்)

ஐ.நா மனித உரிமைகள் ஆணையத்தில் இருந்து இஸ்ரேல் விலகுவதாக அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அமெரிக்காவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள நிலையில், இஸ்ரேல் வெளியுறவுத் துறை அமைச்சர் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

குறித்த விடயத்தை அவர் தனது எக்ஸ் தளப் பதிவில் தெரிவித்துள்ளார்.

பதிவில் அவர் மேலும் தெரிவிக்கையில், "ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தில் இருந்து விலகும் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் முடிவை இஸ்ரேல் வரவேற்கிறது. இந்த விவகாரத்தில் அமெரிக்காவுடன் இஸ்ரேலும் இணைந்து கொள்கிறது.

மேலும் ஐ.நா மனித உரிமைகள் ஆணையத்தில் இஸ்ரேல் பங்கேற்காது" என குறிப்பிட்டுள்ளார்.

மனித உரிமைகளை மீறுபவர்களை ஆய்வுக்கு உட்படுத்தாமல் பாதுகாத்து அவர்களை ஒளிந்து கொள்ள அனுமதிப்பதன் மூலம் ஐ.நா மனித உரிமைகள் ஆணையம் மத்திய கிழக்கில் உள்ள ஒரே ஜனநாயகமான இஸ்ரேலை பேய்த்தனமாக சித்தரிக்கிறது.

இந்த அமைப்பு மனித உரிமைகளை ஊக்குவிப்பதற்குப் பதிலாக, ஒரு ஜனநாயக நாட்டைத் தாக்குவதிலும், யூத விரோதத்தைப் பரப்புவதிலும் கவனம் செலுத்தியுள்ளது. எங்களுக்கு எதிரான பாகுபாடு காட்டப்படுவது தெளிவாகத் தெரிகிறது.


ஐ.நா மனித உரிமைகள் ஆணையத்தில் இஸ்ரேல் மட்டுமே அதற்கென மட்டுமே உருவாக்கப்பட்ட தனி விதிகளை கொண்ட ஒரே நாடு. இஸ்ரேல் 100 இற்கும் மேற்பட்ட கண்டனத் தீர்மானங்களுக்கு உள்ளாகியுள்ளது.இது கவுன்சிலில் இது வரை நிறைவேற்றப்பட்ட அனைத்து தீர்மானங்களிலும் 20% இற்கும் அதிகமானவை.

ஈரான், கியூபா, வட கொரியா மற்றும் வெனிசுலா ஆகிய நாடுகளுக்கு எதிரானதை விட அதிகம். இஸ்ரேல் இனி இந்தப் பாகுபாட்டையும் ஏற்றுக் கொள்ளாது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-8)

## அமெரிக்காவுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் பொருளாதார உச்சிமாநாட்டை நடத்தும் கனடா

(ஒட்டாவா)

கனடாவின் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அமெரிக்கா விதிக்கும் வரிகள் மற்றும் பொருளாதாரப் பாதிப்புகளை எதிர்கொள்ள வணிக மற்றும் தொழிற் சங்கத் தலைவர்களுடன் டொரொண்டோவில் ஒரு நாள் உச்சிமாநாட்டினை நடத்த இருப்பதாக அறிவித்துள்ளார்.




எல்லை மற்றும் குற்ற அமுலாக்கத்தில் சலுகைகளுக்கு ஈடாக கனேடிய ஏற்றுமதிகள் மீது வரி விதிப்பதை 30 நாட்களுக்கு தாமதப்படுத்துவதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கடந்த திங்கட்கிழமை தெரிவித்திருந்தார்.

இதேவேளை கனடாவின் 75% ஏற்றுமதிகளும் அமெரிக்காவைச் சார்ந்துள்ளது என்பதால் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் வகையில் குறித்த மாநாட்டினை அவர் நடத்தத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த உச்சிமாநாட்டில் வணிகத் தலைவர்கள், தொழில்துறையினர், அரசு அதிகாரிகள் மற்றும் தொழிற் சங்கத் தலைவர்கள் கலந்து கொள்வார்கள் என தெரிவிக்கப்பட்ட போதிலும் கனேடியப் பிரதமர் அலுவலகம் இதில் பங்கேற்க தகுதிவாய்ந்தவர்களின் பட்டியலை வெளியிடவில்லை.

இந்நிலையில் குறித்த உச்சிமாநாடு, அமெரிக்கா சார்ந்த பொருளாதாரத்தின் மீது ஆழ்ந்த நம்பிக்கையை குறைத்து, கனடாவுக்கென தனி வளர்ச்சிப் பாதையை உருவாக்கும் முயற்சியாக கருதப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## உக்ரைனை கைவிடுகிறதா அமெரிக்கா?



(கீவ்)

உக்ரைனை நேட்டோவில் சேர்க்கும் விவகாரத்தில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் முடிவுக்கு ரஷ்யா வரவேற்பு தெரிவித்துள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையேயான போர் 1,000 நாட்களைக் கடந்து நடந்து வருகிறது.

ரஷ்யாவுக்கு எதிரான போரில் உக்ரைனுக்கு ஆதரவாக, முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தொடர்ந்து ஆதரவு கொடுத்து வந்தார். மேலும் நேட்டோ அமைப்பில் உக்ரைனை இணைக்கவும் நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்தார்.

இது ரஷ்யாவுக்கு கடும் அதிருப்தியை ஏற்படுத்தியது.


நேட்டோ அமைப்பில் உக்ரைனை இணைக்கும் முன்னாள் ஜனாதிபதி பைடனின் முடிவை தற்போதைய ஜனாதிபதி ட்ரம்ப் கைவிட்டுவிட்டார்.

இந்த நிலையில், ட்ரம்பின் முடிவுக்கு ரஷ்யா வரவேற்பு தெரிவித்துள்ளது. இது குறித்து ரஷ்ய வெளியுறவுத் துறை அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் கூறுகையில், "உக்ரைன் விவகாரத்தில் முன்னாள் ஜனாதிபதி பைடனின் நிர்வாகம் எடுத்த முடிவுகள் குறித்து ட்ரம்ப் முதல் முறையாக பேசியுள்ளார்.

உக்ரைனை நேட்டோவில் இணைக்கக் கூடாது என்ற ரஷ்யாவின் விருப்பத்திற்கு ட்ரம்ப் ஆதரவு தெரிவித்துள்ளார்" எனத் தெரிவித்தார். (நி-8)

## காசாவி...

## தவிர்க்...



பாலஸ்தீனியர்களை வேறு இடங்களில் குடியேற்றவும், போரினால் பாதிக்கப்பட்ட பகுதியை

அமெரி...
திட்டத்...
ஜனாதி...
வாய்க்கி...

## ஆங் சான் சூ... ஏலம் விடும் மு...

(நைப்பியிதோ)

இராணுவ ஆட்சி இடம் பெற்று வரும் மியன்மாரில், சிறை வைக்கப்பட்டுள்ள முன்னாள் அரச தலைவரான ஆங் சான் சூகியின் வீட்டை, அந்த நாட்டு இராணுவ அரசாங்கம் ஏலத்தில் விட்டுள்ள நிலையில் அதனை வாங்க யாரும் முன் வரவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மியன்மாரில் இராணுவ ஆட்சிக்கு எதிராகச் சிறையில் இருந்து போராடியவர் ஆங் சான் சூகி. இதற்காக அவருக்கு அமைதிக்கான நோபல் பரிசும் வழங்கப்பட்டிருந்தது.

இவருடைய தொடர் போராட்டம் காரணமாக அங்கு இராணுவ ஆட்சி கலைக்கப்பட்டது. தொடர்ந்து அங்கு 2015 ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் ஆங் சான் சூகி வெற்றி பெற்று அந்த நாட்டின் தலைவராகப் பதவியேற்றார்.

அத்துடன் 2020 ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்லில் 81 சதவீத வாக்குகளை பெற்று மீண்டும் ஆட்சி அமைத்தார். இருப்பினும்



2021 ஆ...
நாட்டை...
ணுவம் ...
கொண்டு...
ஊழல் கு...
குப்பதிவு...
ஆண்டுக...
னையும் ...
இந்நி...
உள்ள ச...
விடுதலை...
அங்கு ெப...
டம் நடத்...
அவர்கள் ...
இராணு...
காட்டி அ...
மியன்மா...
நிதி நெற...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ாவில் இனச் சுத்திகரிப்புகளை ர்க்குமாறு ஐ.நா எச்சரிக்கை!



**(ஜெனீவா)**

**காசாவில் இனச் சுத்திகரிப்புகளை மேற் கொள்ளும் திட்டங்களை தவிர்க்குமாறு ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செய லாளர் அன்டோனியோ குட்டெரெஸ் நேற்று முன்தினம் புதன்கிழமை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பிடம் தெரிவித்தார்.**




அமெரிக்கா கைப்பற்றும் திட்டத்தினையும் அமெரிக்க ஜனாதிபதி கடந்த செவ் வாய்க்கிழமை வெள்ளை மாளிகையில் முன் மொழிந்ததை அடுத்து இந்த அறிவிப்பு வெளி வந்துள்ளது.

தீர்வுக்கான தேடலில், நாம் பிரச்சினையை மேர்ச மாக்கக்கூடாது.

சர்வதேசச் சட்டத்திற்கு உண்மையாக இருப்பது இன்றியமையாதது.

இனச் சுத்திகரிப்பு எந்த வகையிலும் தவிர்க்கப்பட வேண்டியது அவசியம் என்றும் ஐ.நா.வின் பொதுச் செயலாளர் வலியுறுத் தினார். (நி-8)

## ன் சூகியின் வீட்டை டும் முயற்சி தோல்வி



2021 ஆம் ஆண்டு அந்த நாட்டை மீண்டும் இரா ணுவம் தனது ஆட்சிக்குள் கொண்டுவந்தது. இவர் மீது ஊழல் குற்றச்சாட்டு வழக் குப்பதிவு செய்யப்பட்டு 27 ஆண்டுகள் சிறைத் தண்ட னையும் விதிக்கப்பட்டது.

இந்நிலையில் சிறையில் உள்ள ஆங்சான் சூகியை விடுதலை செய்யக்கோரி அங்கு பொதுமக்கள் போராட் டம் நடத்தி வருகிறார்கள். அவர்கள் மீது அந்த நாட்டின் இராணுவம் கோர முகத்தை காட்டி அடக்கி வருகிறது. மியன்மாரில் கடுமையான நிதி நெருக்கடி நிலவி வரும் நிலையில் ஆங்சான் சூகிக்கு சொந்தமான சொத்துகளை இராணுவம் விற்று பொரு ளாதார இழப்பைச் சரிக்கட்டி வருகிறது.

இராணுவ நெருக்கடி நிலையின்போது ஆங் சான் சூகி அடைக்கப்பட்டிருந்த வீடு கையகப்படுத்தப்பட்டது. மேலும் அதனை ஏலம் விட இராணுவம் நடவடிக்கை எடுத்தது. ஆனால் ஏலம் விடப்பட்ட அந்த வீட்டை யாரும் வாங்க முன் வர வில்லை.

வரலாற்று சிறப்பு வாய்ந்த நினைவுச் சின்னமாக கருதப் படும் அந்த குட்டி பங்களா, யங்கூனில் உள்ள இனியே ஏரிக்கரையில் கட்டப்பட்டது. சூகியின் தந்தையும் அந்த நாட்டின் விடுதலைப் போராட்ட வீர ரான இராணுவத் தளபதி ஆங் சாங்கும் வசித்து வந்த பூர்வீக வீடாக அது உள்ளது.

அந்த வீடுதான் ஆங் சான் சூகி 15 ஆண்டு களுக்கு மேலாக சிறை வைக்கப்பட்டு அறவழி யில் போராட வழிவகுத் தது. மேலும் நோபல் பரிசையும் பெற்று தந் தது.

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஒபாமா, ஹிலாரி கிளிண்டன், ஐ.நா சபை முன்னாள் பொதுச் செயலாளர் பான்-கி-மூன் முதலியவர்கள் அந்த வீட்டில் வைத்து தான் ஆங் சான் சூகியை சந்தித்தனர்.

இந்நிலையில் ஆங் சான் சூகியின் வீட்டை ஏலம் விட மூன்றாவது முறையாக இராணுவ அரசு முயற்சித்த போதும் மியன்மார் இராணுவத் தினரின் ஏலம் விடும் முயற்சி தோல்வியில் முடிந் துள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (நி-8)

## ஷேக் ஹசீனாவின் வீட்டை தீக்கிரையாக்கிய எதிர்ப்பாளர்கள்



(டாக்கா)

பங்களாதேஷில் எதிர்ப்பாளர்கள், பதவி நீக்கம் செய்யப்பட்ட முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவின் குடும்ப வீட்டையும் அவரது கட்சியைச் சேர்ந்த மற்ற உறுப்பினர்களின் வீட்டையும் நாசப்படுத்தி தீ வைத்து எரித்தனர்.

கடந்த ஆண்டு மாணவர்கள் நடத்திய போராட்டங்கள் அவரை நாட்டைவிட்டு வெளியேற்றியதில் இருந்து நாடு கடத்தப்பட்ட ஹசீனா இந்தியாவில் இருந்து சமூக ஊட கங்கள் மூலம் நாட்டிற்கு உரை யாற்றுவார் என்ற செய்தியால் இந்த அமைதியின்மை ஏற்பட்டது.20 ஆண்டுகளாக பங்களாதேஷின் பொறுப்பில் இருந்த 77 வயதான ஹசீனா, ஒரு சர்வாதிகாரியாக முத்திரை குத்தப்பட்டார்.

இந்த நிலையில் நேற்று முன் தினம் புதன்கிழமை மாலை எதிர்ப் பாளர்கள் டாக்காவில் அமைந்துள்ள ஹசீனாவின் மறைந்த தந்தையும் பங்களாதேஷின் ஸ்தாபகத் தலை வருமான ஷேக் முஜிபுர் ரஹ்மானின் வீட்டை தீயிட்டு எரித்ததுடன், ஜேசிபி இயந்திரம் மூலம் இடித்து நொருக்கி யுமுள்ளனர்.

ஹசீனாவின் தந்தை ஒரு சுதந்திர நாயகனாகப் பரவலாகப் பார்க்கப்படு கிறார், ஆனால் அவரது மகள் மீதான கோபம் ஹசீனாவின் விமர்சகர்களி டையே அவரது பாரம்பரியத்தை குறைமதிப்புக்கு உட்படுத்தியது.

ஒரு காலத்தில் ஜனநாயகச் சார்பு சின்னமாகப் போற்றப்பட்ட ஹசீனா, பதவியேற்ற பின்னர் தனது நற்பெய ருக்கு களங்கம் விளைவிக்கும் செயல்களில் ஈடுபட்டார்.அவர் தேர் தல்களில் முறை கேடு செய்ததாகவும் அவரை விமர்சிப்பவர்களை சிறை யில் அடைத்ததாகவும் குற்றம் சாட் டப்பட்டார், மேலும் அவரது நிர்வாகம் ஊழல் நிறைந்ததாகப் பரவலாகக் காணப்பட்டது.

கடந்த ஆண்டு மாணவர்களின் தலைமையிலான போராட்டங்களை ஒடுக்கியதற்காக அவர் பிடியாணை உத்தரவினை எதிர்கொள்கிறார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக ஊடகங்களில் பகிரப்படும் போலி விளம்பரங்கள்

## எச்சரிக்கையுடன் செயற்படுமாறு அறிவுறுத்து

**(கொழும்பு)** அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் சின்னங்களைப் பயன்படுத்தி சமூக ஊடகங்களில் பகிரப்படும் போலி தொழில் வாய்ப்பு விளம்பரங்களில் இடம்பெறும் மோசடிகள் குறித்து எச்சரிக்கையாக இருக்குமாறு இலங்கை கணனி அவசர தயார்நிலைக் குழு தெரிவித்துள்ளது.

இலங்கை கணனி அவசர தயார் நிலைக் குழு மேலும் தெரிவிக்கையில், கடந்த நாட்களில் பொதுமக்கள் மத்தியில் இவ்வாறான மோசடிகள் அதிகம் இடம்பெறுகின்றன.

அண்மையில் இலங்கை மத்திய வங்கி, தமது சின்னத்தைப் பயன்படுத்தி சமூக ஊடகங்களில் பகிரப்படும் போலி விளம்பரங்கள் குறித்து பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்திருந்தது.

இந்நிலையில் ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் சின்னத்தைப் பயன்படுத்தியும் பல போலி விளம்பரங்கள் சமூக ஊடகங்களில் பகிரப்பட்டன.

இவ்வாறான போலி விளம்பரங்கள் மூலம் பொதுமக்களின் தேசிய அடையாள அட்டை மற்றும் பிறப்புச் சான்றிதழ்களின் பிரதிகளைப் பெற்று அவர்களின் தனிப்பட்ட தகவல்களைத் திருடுவதாக இலங்கை கணனி அவசர தயார் நிலைக்குழுவின் பாதுகாப்பு பொறியியலாளர் சாருக தமுனுபொல தெரிவித்துள்ளார். (நி-8)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 750 | 600 | 700 | 800-900 | 600 |
| உருளைக்கிழங்கு | 200 | 180 | 170 | 150 | 200 |
| பச்சைமிளகாய் | 1200 | 1600 | 1000 | 1000-1250 | 1000 |
| தக்காளி | 200 | 250 | 200 | 200 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 140 | 200 | 200 | 240 |
| கோவா | 350 | 300 | 250 | 350 | 400 |
| கரட் | 450 | 700 | 600 | 550 | 600 |
| பூசணி | 120 | 120 | 150 | 120 | 200 |
| புடோல் | 250 | 200 | 200 | 200 | 400 |
| வாழைக்காய் | 200 | 150 | 160 | 100-150 | 300 |
| சின்ன வெங்காயம் | 350 | 400 | 500 | 250-400 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 240 | 180 | 150 | 200 |
| பாகற்காய் | 500 | 600 | 500 | 500-550 | 600 |
| வெண்டக்காய் | 350 | 400 | 300 | 250-300 | 600 |
| கருணைக் கிழங்கு | 120 | 170 | 150 | 100-120 | 240 |
| பயற்றங்காய் | 600 | 500 | 700 | 400-500 | 400 |
| லீக்ஸ் | 350 | 350 | 300 | 350 | 400 |
| பீற்றூட் | 350 | 300 | 400 | 330 | 400 |
| கறிமிளகாய் | 1100 | 1000 | 900 | 800 | 1000 |
| முருங்கைக்காய் | -- | 3000 | 1500 | 1500 | 2000 |
| போஞ்சி | 450 | 400 | 400 | 350-400 | 500 |
| கத்தரிதம்புள்ள | 650 | 550 | 500 | 500 | 500 |
| கீரை - 1 பிடி | 100 | 120 | 80 | 50-70 | 150 |
| தேசிக்காய் | 250 | 250 | 250 | 100-120 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 220 | 240 | 200-250 | 150-220 | 200-260 |
| இராசவள்ளி | 600 | 450 | 500 | 400-500 | 600 |
| வெங்காயப்பூ | 200 | 160 | 230 | 150-200 | 200 |
| முள்ளங்கி | 100 | 140 | 100 | 100-120 | 200 |
| பொன்னாங்காணி | 120 | 90 | 130 | 100 | 80 |
| வல்லாரை | 60 | 70 | 50 | 50 | 100 |
| ஈரப்பலா | 100 | 140 | 100 | 100 | 100 |

# இன்று ஒரு தகவல் 317



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

# சிறை

ஒருவர் சொன்னார். நான் என் அப்பாவை விட்டுப் பிரிவதில்லை. அவர் எங்கே இருக்கிறாரோ அங்கே தான் நானும் இருப்பேன் என்றார். உங்கள் அப்பா எங்கே இருக்கிறார் என்று கேட்டேன். அவர் சிறையில் இருக்கின்றார். என்றார். சிறைக்குப் போனாலும் சேர்ந்தே போகும் அளவுக்கு என்ன ஒரு பந்தம் அது.

இந்தக் காலத்திலே இவர்கள் எல்லாம் சிறைக்குப் போவது ஏதோ மாமியார் வீட்டுக்குச் சென்று வருவது போல சென்று வருகிறார்கள். ஆனால் அந்த காலத்தில் எல்லாம் இப்படி முடியாது! ஒரு காலத்தில் சிறைக்குப் போவது என்றால் பயந்து நடுங்குபவர்களும் உண்டு தெரியுமா? 1403இல் இங்கிலாந்து சிறைச்சாலை உருவானது. அது அரசாங்கத்தின் நேரடி நிர்வாகத்திலே இருந்தது.ஆனால் அதற்கு முன்னால் சங்க காலத்திலே தமிழ்நாட்டிலே சிறைகள் இருந்திருக்கிறது. அதுபற்றி பல குறிப்புகள் இருந்தன.

கணைக்கால் இரும்பொறை சிறையிலிருந்து தண்ணீர் கேட்டு அதை கொடுக்காததால் அவமானம் தாங்காமல் ஒரு பாடல் எழுதி (புறம் 74) இறந்ததாக குறிப்பு இருக்கிறது. “குணவாயில் தோட்டத்தில் சிறை வைத்தான்” என்று சொல்வார்கள். அந்த வாயிற் கோட்டம் கும்பகோணமா இருக்க வேண்டும் அல்லது திருச்சி மலைக் கோட்டையாக இருக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். சிறையிலே குற்றவாளிகளை மிகவும் கஷ்டப்படுத்துவார்கள். அதனாலே சிறைக்குப் போவது என்றால் எல்லோருக்கும் பயம்.

இந்தப் பயம் இருந்தால்தான் மனிதன் தவறு செய்ய மாட்டான் என்று நினைத்தார்கள் ஆனால் காலப்போக்கில் கணக்குப் பார்த்தால் இதனாலே குற்றம் குறைவதாகத் தெரியவில்லை. பெரிய தவறுக்கு மரண தண்டனை கொண்டு வந்தார்கள்.

1550 ஆம் வருடத்திற்குப் பிறகு இங்கிலாந்திலும் இன்னும் சில ஐரோப்பிய நாடுகளிலும் சிறைச்சாலை நிறுவினார்கள். அதற்கெல்லாம் என்ன பெயர் தெரியுமா?work hosuses- houses of correctionஇப்படி எல்லாம் அதற்குப் பெயர்.

பிச்சைக்காரர்கள், கடன்காரர்கள், குடும்பத்தை தவிக்க விட்டு ஓடியவர்கள், சும்மா திரிபவர்களையெல்லாம் இங்கே பிடித்துக் கொண்டு வந்து அடைத்து வைப்பது வழக்கம். பெரிய தவறு செய்பவர்களுக்கு இது சரியான இடமே இல்லை. அதனால் அவர்களுக்காக அதிக பாதுகாப்பு இருப்பது போல சிறைகள் கட்டினார்கள். இருந்தாலும் எல்லாவிதமான குற்றவாளிகளையும் ஒரே அறையில் வைத்தார்கள்.

ஒரு வேலையும் கிடையாது. சாப்பாடும் கிடையாது. ஆடு மாதிரி அடைத்து வைத்தார்கள். 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே கைதிகள் எல்லோரும் நல்ல முறையில் நடத்தப்பட வேண்டும், சிறை சுத்தமாக, சுகாதாரமாகவும் இருக்க வேண்டும் என்கின்ற கூக்குரல் எழுந்தது. அதன் பின்பு காலப்போக்கிலே பல பல சீர்திருத்தங்கள் எல்லாம் செய்ய ஆரம்பித்தார்கள். இப்போது எல்லாம் நிலைமை மிகவும் மாறிப்போய் விட்டது. கைதிகள் சிறையிலே சும்மா இருக்க வேண்டியதில்லை. அவர்களுக்கு எல்லாம் வேலை கொடுக்கிறார்கள், படிக்கலாம், தொழில் கற்றுக்கொள்ளலாம், வைத்தியவசதி, பொழுதுபோக்கு வசதி எல்லாம் இருந்தன.

சிறைச்சாலைகளை இன்னும் சீர்திருத்த வேண்டும் என்று நிறைய யோசனைகள் எல்லாம் செய்தார்கள். எல்லாம் எதற்காக? சிறை செல்பவர்களை மனிதாபிமான முறையில் சீர்செய்வதற்குத் தான். முன்னைய காலத்தில் குற்றவாளிகளைப் பிடித்துச் சிறையில் அடைப்பார்கள். வழக்கு விசாரணை வரும் வரைக்கும் அவர்கள் அங்கேயே இருக்க வேண்டும். விசாரித்து தீர்ப்பு வந்து விட்டால் தண்டனை வழங்கி விடுவார்கள். தண்டனை என்றால் மரண தண்டனை இல்லையென்றால் கசையடி, சித்திரவதை, அபராதம் இப்படி ஏதாவது இருக்கும். தண்டனைக்காக சிறையில் அடைத்து வைக்கும் பழக்கம் அப்போது எல்லாம் இல்லை. மன்னராட்சிக் காலத்தில் ஒரு அரசியை ஒருவன் கடத்திக் கொண்டு போய் விட்டான். உடனே ராஜாவிடம் எல்லோரும் ஓடிவந்து இந்த விடயத்தைச் சொன்னார்கள்.

கடத்திக் கொண்டு போனவனை கண்டுபிடித்து எங்கிருந்தாலும் என் முன்னால் கொண்டு வந்து நிறுத்துங்கள் என்று உத்தரவிட்டார் ராஜா. அவனை என்ன செய்யப்போகிறீர்கள் என்று கேட்டார் அமைச்சர். அவனுக்கு என்னுடைய பாராட்டையும் நன்றியையும் தெரிவிக்கப் போகிறேன் என்றார் ராஜா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரணைதீவில் கைதான 34 இந்திய மீனவர்களில்

## ❖19 பேருக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாவும் ❖2 படகோட்டிகளுக்கு தலா 6 மில். தண்டமும் விதிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி இரணை தீவுக்கு அண்மித்த கடற்பகுதியில் மூன்று படகுகளுடன் கைது செய்யப்பட்ட 34 இந்திய மீனவர்களில் 19 பேருக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாய் தண்டமும், 2 படகோட்டிகளுக்கு தலா ஆறு மில்லியன் ரூபா தண்டமும் விதிக்கப்பட்டதுடன் செலுத்தத் தவறின் ஆறு மாதகால சாதாரண சிறைத்தண்டனையை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டதுடன் பத்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஆறுமாத கால சிறைத் தண்டனையும் விதித்து தீர்ப்பளித்துள்ளது.

கடந்த ஜனவரி 26 ஆம் திகதி அதிகாலை 2 மணியளவில் இரணைதீவிற்கு அண்மித்த கடற்பரப்பில் அத்துமீறிய மீன் பிடியில் ஈடுபட்ட மூன்று இந்திய இழுவைப்படகுகளையும் அதிலிருந்த 34 இந்திய மீனவர்களையும் இலங்கை கடற்படையினர் கைது செய்து கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்திடம் ஒப்படைத்தனர்.

குறித்த 34 பேருக்கும் எதிராக வழக்குப்பதிவு செய்த மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் அன்றைய தினம் இரவு கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற வாசல் தலத்தில் நீதிமன்றப் பதில் நீதிவான் எஸ். சிவபாலசுப்பிரமணியம் முன்னிலையில் கைதானவர்களை ஆஜர்படுத்தியதையடுத்து நேற்று முன்தினம் வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது

இவ் வழக்கானது நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது இரண்டு படகுகளில் பயணித்த 19 பேருக்கு தலா 50 ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்துமாறும் தண்டப்பணம் செலுத்தத் தவறின் ஆறு மாத கால சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளதுடன் பத்து வருடங்களுக்கு ஒத்திவைக்ப்பட்ட ஆறு மாத கால சிறை தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இதனுடன் தொடர்புபட்ட 2 படகோட்டிகளுக்கும் படகு உரிமையாளர் ஒருவருக்கும் தலா ஆறு மில்லியன் ரூபா தண்டப்பணம் செலுத்துமாறும் தண்டப் பணம் செலுத்தத் தவறின் ஆறு மாத கால சாதாரண சிறைத்தண்டனையை அனுபவிக்குமாறு உத்தர விடப்பட்டதுடன் படகு மற்றும் மீன்பிடி உபகரணங்கள் என்பன அரசுடைமையாக்கப்பட்டுள்ளன.

இதேவேளை 15 பேர் பயணித்த மற்றைய ஒரு படகின் பதிவு இலக்கம் வேறுபட்டு காணப்பட்டதனால் அது தொடர்பான வழக்கு எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டுள்ளது. (6-8-315)

# மன்னார் வைத்தியசாலைக்கு ரூ.600 மில்லியன் நன்கொடை

(மன்னார்)

மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் திடீர் விபத்துக்கள் மற்றும் தீவிர சிகிச்சைப் பிரிவின் கட்டுமானம் மற்றும் மருத்துவ உபகரணங்கள் வழங்குவதற்கான இந்திய அரசுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் காணப்படும் ஒரேயொரு மூன்றாம் நிலை சிகிச்சைகளுக்கான வைத்தியசாலையான மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் திடீர் விபத்துக்கள் மற்றும் தீவிர சிகிச்சைப் பிரிவின் கட்டுமானம் மற்றும் மருத்துவ உபகரணங்கள் வழங்குவதற்காக உயர்ந்தபட்சம் 600 மில்லியன் இலங்கை ரூபாய்களை நன்கொடையாக வழங்குவதற்கு இந்திய அரசு உடன்பாடு தெரிவித்துள்ளது.

அப் பணிகளுக்கு இருதரப்பினருக்கிடையே கையொப்பமிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு வெளிநாட்டலுவல்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சின் உடன்பாடு கிடைக்கப் பெற்றுள்ளது.

அதற்கமைய இருதரப்பினருக்கிடையிலான குறித்த ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (6-8)

# சட்டவிரோதமான முறையில் மன்னாருக்கு கடத்தப்பட்ட

## ❖பறவைகள், விலங்குகள், மருந்துகள் ❖3 சந்தேக நபர்கள் கைது

(மன்னார்)

சட்டவிரோதமான முறையில் இந்தியாவில் இருந்து தலை மன்னாருக்குப் படகு மூலம் கடத்தப்பட்ட பறவைகள், விலங்குகள் மற்றும் மருந்துப் பொருட்களுடன் 3 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை கடற்படையினரும் பொலிஸாரும் இணைந்து மன்னார், பேசாலை பகுதியில் கடந்த செவ்வாயக்கிழமை முன்னெடுத்த ரோந்து நடவடிக்கையின் போது இக் கடத்தல் முறியடிக்கப்பட்டுள்ளது

புறாக்கள், ஆபிரிக்க கிளிகள் பறக்கும் அணில்கள் மற்றும் மருந்துகள் என்பன இதன் போது மீட்கப்பட்டுள்ளதுடன் மேலும் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட லொறி ஒன்றும் பறிமுதல் செய்யப்பட்டு மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (6-8-285)

# ஏலவிற்பனை

(முல்லைத்தீவு)

மாங்குளம் சுற்றுலா நீதிமன்றத்தினால் அரசுடைமையாக்கப்பட்ட மணல் பகிரங்க ஏல விற்பனை எதிர்வரும் 2025.02.17 ஆம் திகதி (திங்கட்கிழமை) காலை 9 மணிக்கு மாங்குளம் சுற்றுலா நீதிமன்ற வளாகத்தில் நடைபெறவுள்ளது என முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (6-8)

# தைப்பூசம் 11.02.2025 இற்கு முன் ஆறுநாளும் எம் பெருமானை வேல் பிடித்து கால் பிடித்து கந்தர் அநுபூதி, திருப்புகழ் ஓதி தொழுதால் நமது வேண்டுதலை நிறைவேற்றி நம்மை முருகன் கரம் பிடித்து உயர்த்துவான்

திருப்பழநியில் வீற்றிருந்த பெருமானே!
உனையே வணங்க வரவேனும்

**மனக்கவலை யேது மின்றி உனக்கடிமையே புரிந்து**
**வகைக்குமநு நால் விதங்கள் ...... தவறாதே**
**வகைப்படிம னோர தங்கள் தொகைப்படியி னாலி லங்கி**
**மயக்கமற வேத முங்கொள் ...... பொருள்நாடி**
**வினைக்குரிய பாத கங்கள் துகைத்துவகை யால் நினைந்து**
**மிகுத்தபொரு ளாக மங்கள் ...... முறையாலே**
**வெகுட்சிதனை யேது ரந்து களிப்பினுடனே நடந்து**
**மிகுக்குமுனையே வணங்க ...... வரவேணும்**
**மனத்தில்வரு வோனெ என்று னடைக்கலம தாக வந்து**
**மலர்ப்பதம தேப ணிந்த ...... முநிவோர்கள்**
**வரர்க்குமிமை யோர்க ளென்பர் தமக்குமன மேயி ரங்கி**
**மருட்டிவரு சூரை வென்ற ...... முனைவேலா**
**தினைப்புனமு னேந டந்து குறக்கொடியை யேம ணைந்து**
**செகத்தைமுழு தாள வந்த ...... பெரியோனே**
**செழித்தவள மேசி றந்த மலர்ப்பொழில்க ளேநி றைந்த**
**திருப்பழநி வாழ வந்த ...... பெருமாளே.**

திருப்புகழ் 1346

தினம் ஓதவேண்டிய திருப்புகழ் இது பதிகமும். கட்டுரையும் கொப்பி எடுத்து மற்றவர்களுக்கு கொடுத்து இறை அருள் பெறுவோம்.

மனக்கவலை சிறிதேனும் இல்லாமல் உனக்கு அடிமை செய்யும் பணியையே பூண்டு. வகையாய் அமைந்துள்ள **நீதி நூல் முறைகளில்** தவறாமல்-**நல்ல முறையில் மன விருப்பங்கள் அடியார்கள் எண்ணிய படியே விளங்கி,** ஐயந்திரிபு இல்லாமல் வேதத்தில் சொல்லப்பட்ட பொருளை ஆராய்ந்து விரும்பி. வினைக்கு ஈடான **பாதகச் செயல்களைக் கடிந்து விலக்கி,** முற்றைப்படி தியானித்து. மேலான பொருட்களைக் கொண்டு ஆகமங்களிற் சொன்ன முறைப்படி **கோபம் என்பதை விலக்கி நீக்கி** மகிழ்ச்சியுடன் நடந்து **கடமைகளைச் சீராகச் செய்து** மேம்பட்ட உன்னையே (பழநி முருகன்) நாம் வணங்குவதற்கு ஆக வேண்டிய அருளைத் தர நீ வரவேணும்.

தியானிக்க மனத்தில் வருபவனே என்று **உன்னிடம் நாம் அடைக்கலப் பொருளாய் வந்து சேர்ந்து உனது மலர்ப் பாதங்களையே பணிந்து வணங்குவோம்.** வானோர் பொருட்டும் தேவர்கள் பொருட்டும் மனம் இரங்கி யாவரையும் பயமுறுத்தி வந்த சூரனே வென்ற கூரிய வேலனே! தைப்பூசத் தினத்தில் நாம் எல்லோரும் **ஈழத்துச் சிதம்பரம் ஆலயமும், திக்கு அற்றவர்க்கு அருள் புரியும் திக்கரை முருகன் ஆலயமும், சகல தடைகளையும் நீக்கி** 2026 ஆம் ஆண்டு தைப்பூசத் தினம் மஹா கும்பாபிஷேகம் நடைபெற்று மேற்படி இரு ஆலயத்தில் தரிசிக்க பழநி முருகனை வழிபடுவோம்.

தைப்பூசம் வியாழன் 06.02.2025 தொடக்கம் 11.02.2025 ஆறு நாட்களும் முருகனை மனதில் இருத்தி திருப்புகழ், கந்தர் அனுபூதி. பரமகுருவின் சண்முக கவசம் மற்றும் முருகன் பாடல்கள் ஓதியும் வணங்க வேண்டும். இந்த ஆறு நாட்களும் முருக நாமம் ஓம் சரவணபவ மனதிலும் மற்ற நாமங்கள் சத்தம் வெளி வரச்சொல்லியும் வழிபடுதல் முக்கியம். காலையும் மாலையும் கட்டாயம் வழிபட வேண்டும். ஆறு தீபம் வீட்டில் (ஏற்றியும்) அல்லது ஆலயத்தில் ஏற்றியும் வழிபடலாம். ஆறு நாட்களும் கந்தர் அநுபூதி முழுமையாக ஓத வேண்டும். மனம் உருகி வழிபட்டால் நிச்சயமாக நாம் கேட்கும் வரம் அனைத்தும் கிடைக்கும். முருகனுக்கு பல மலர் முருகன் பாதத்தில் சமர்ப்பித்து வழிபட வேண்டும். தினை மாவில் தேன். நெய் சேர்த்து நெய் விட்டுத் தீபம் ஏற்றினால் நல்லது. தைப்பூசத் தினத்தில் வள்ளி முருகன் திருமணம் நடந்தது. வள்ளி தினைமாவில் தான் தீபம் ஏற்றி வழிபட்டவர்.

தைப்பூசத்தன்று அற்புதங்கள் பல முருகன் அசுரரை அழிக்க அம்மாவிடம் வேல் வாங்கிய தினம். வள்ளி திருமணமும் பழநிக்கு முதல் காவடியாக இடும்பன் காவடி எடுத்த தினம் இன்னும் பல அற்புதங்கள்-தைப்பூசம் அன்று தான். பதஞ்சலி முனிவர். **வியாக்கிர**பாத முனிவர். தில்லையில் தில்லைக்கூத்தன் திரு நடனம் முதல் தோன்றிச் செய்த தினமும் தைப்பூசம் முருகன் சேனாபதியாகிய கந்தனாக பகவான் கிருஸ்ணன் வர்ணித்த நாளும் தைப்பூசம் ஆகும்.

காசித்தலத்தினும் சிறந்த பழநியங்கிரியில் வீற்றிருக்கும் முருகன் கேட்டதைக் கொடுக்கும் சிந்தாமணியே தைப்பூசத்தினத்தில் வேண்டுவார் வேண்டுவதை ஈவான் முருகன். அண்மையில் உள்ள முருகன் ஆலயம் சென்று வழிபடுவோம். திருப்புகழ் கந்தர் அநுபூதி. முருகன் பதிகங்கள் ஓதுவோம் அவன் அருள் பெறுவோம்.



**க.கு.க சிவபாலன்**
**போசகர், ஈழத்துச் சிதம்பரம்,**
**மாணிக்கவாசகர் மடாலயம்.**

(சி-2210)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன அழுத்தம்

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்க A பிரிவு

மனிதர்கள் தனிமனித மற்றும் சமூக வாழ்க்கையில் பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. ஆனால் அது அவரவர் உளநிலையைப் பொறுத்து மாறுபடுகின்றது. மனஅழுத்தம் என்பது வாழ்க்கையில் சவால்கள், பிரச்சினைகள் மற்றும் எதிர்மறையான மனவெழுச்சி அனுபவங்களால் நடத்தையில் அல்லது உடல் சார்ந்த இரசாயன இயக்கங்களில் நிகழும் உடலியல், உளவியல் மாற்றம் ஆகும். ஒருவர் ஓர் சூழ்நிலையை எப்படி எதிர்நோக்குகிறார் என்பதைப் பொறுத்து மனஅழுத்தத்தின் வீரியம் அல்லது அளவு மாறுபடுவது போல ஒருவரது மனதின் பலம், பலவீனத்தை பொறுத்தும் மனஅழுத்தம் மாறுபடும். ஒருவரது பலம், பலவீனமானது அவரவர் மனோபாவம், மீளும் தன்மை, கையாளும் திறன் மற்றும் சமூக ஆதரவு போன்றவற்றிலிருந்து ஏற்படுகின்றது. மேலும் மனஅழுத்தம் குறுகிய அல்லது நீண்ட காலப் பிரச்சினைகளிலிருந்து உருவாகுவதாகும். இந்த மாற்றங்களை தூண்டும் நிகழ்வுகளை மனஅழுத்த தூண்டிகள் என்கின்றோம். மனஅழுத்தம், இருதய நோயாளிகளில் 48 வீதம் மரணம் அல்லது மாரடைப்பு அபாயத்தை ஏற்படுத்துகின்றது என அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்று குறிப்பிடுகின்றது.

மனஅழுத்தம் என்பது வெறுமனே நம் உடல் அல்லது உளச்சமநிலை சூழலைப் பாதிக்கின்றதோர் அழுத்த நிலையாகும். அது வாழ்க்கையில் நிறைந்திருக்கின்ற ஒரு பகுதியாகக் காணப்படுகின்றது. இது உடலில் கார்டிசோல் மற்றும் அதிரினலீன் போன்ற ஹோர்மோன்களை அதிகரிக்கச் செய்கின்றது. மனஅழுத்தம் ஒரு சிறிய அழுத்தமாகவோ அல்லது தீவிரமான அழுத்தமாகவோ காணப்படலாம். எவ்வாறிருப்பினும் இது எமது சிந்தனையிலும் நடத்தையிலும் எச்சரிக்கையை ஏற்படுத்துவதாகக் காணப்படுகின்றது. ஆனால் நீண்டகால மனஅழுத்தம் என்பது உடல், உள பாதிப்பை கொடுக்கும். எம்மால் அழுத்தங்களை கட்டுப்படுத்த முடியாமல் போகலாம். ஆனால் அவற்றினைக் கையாளக்கூடிய எதிர்வினைச் செயல்களை செய்ய முடியும். மன அழுத்தமானது ஏதாவதொருவகையில் சவாலாகவோ அல்லது எமது நலனை அச்சுறுத்துவதாகவோ அமையும். சில அழுத்தங்கள் நாம் வாழ்க்கையில் என்ன செய்யவேண்டுமென்பதை விளக்குவதாகக் காணப்படுகின்றது. வாழ்க்கையில் எந்தவொரு மன அழுத்தமும் இல்லாமல் பலமணி நேரத்திற்கு எம்மால் இருக்க முடியாது. அவ்வாறிருப்பது நம் வாழ்வில் சலிப்புத் தன்மையை ஏற்படுத்துவதோடு வாழ்க்கையில் எவ்விதமான பயனையும் உணரமுடியாமல் போய்விடுகின்ற சந்தர்ப்பமும் உண்டு.


மனஅழுத்தம் என்பது "மனிதன் அல்லது விலங்கு அல்லது உயிரினத்தில் உண்மையாகவோ அல்லது கற்பனையாகவோ உடல் ரீதியாக அல்லது மன ரீதியாக ஏற்படும் தாக்கங்களுக்கு சரியான முறையில் எதிர்ச் செயலை செய்ய முடியாத நிலை தோன்றுவதன் மூலமான தொடர்விளைவு அல்லது பின்விளைவு" ஆகும். மேலும் "ஒரு உயிர் சாதாரண நிகழ்வுகளுக்கு முகங்கொடுக்க முடியாதுள்ள போது ஏற்படுகின்ற அசாதாரண சூழ்நிலையே மனஅழுத்தம்" எனப்படுகின்றது. அத்தோடு "எண்ணத்திற்கும் யதார்த்தத்திற்கும் உள்ள முரண்பாட்டுச் சூழலால் உடல், உள ரீதியில் குழப்பம் ஏற்படுகின்ற நிலையையே மனஅழுத்தம் என்று கூறுகின்றோம். இந்த மன அழுத்தம் என்கிற பதமானது 1930ஆம் ஆண்டில் பயன்படுத்தப்பட்டது. கான் செல்லி என்பவரால் முதன்முதலில் உயிரியலில் பயன்படுத்தப்பட்டது. மேலும் இவரால் எந்தவொரு தாக்கத்திற்கும் எதிரானதொரு உடற்றொழிலியல் எதிர்விளைவு கொடுக்கப்படும் நிலையைக் காட்டுவதாக இந்தப் பதம் விரிவுபடுத்தப்பட்டது.

தொடர்ச்சியான சூழல் மாற்றங்கள், போட்டிகரமான மற்றும் சிக்கலான வாழ்க்கை முறைகள் மற்றும் வரையறையான ஓய்வு நேரம் போன்ற காரணிகள் ஓர் கேள்விகரமான மற்றும் சவால்மிக்க சூழ்நிலையை உருவாக்கி மன அழுத்தத்தை உலகளாவிய ரீதியில் பரவியிருக்கும் ஓர் பிரச்சினையாக மாற்றியிருக்கின்றன. மனஅழுத்தத்தின் பரவல் மற்றும் அதன் தாக்கத்தால் உடல், உள நலத்தில் ஏற்படும் பாதகமான விளைவுகளால் வினைத்திறன் மிக்க மன அழுத்த முகாமைத்துவம் இன்றியமையாததாகின்றது. தனி நபர்களின் வினைத்திறனான மன அழுத்த முகாமைத்துவத்துக்கும் சீரான உடல், உள நலத்துக்கும் மனஅழுத்த முகாமைத்துவ பொறிமுறைகளை மேம்படுத்தலும் ஊக்குவித்தலும் முக்கியத்துவமாகின்றன. ராசலிங்கம் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் போது இலங்கை முழுவதும் சுமார் 40%இற்கும் மேற்பட்ட இளம் பருவத்தினர் மனநிலை ஆரோக்கியம் குன்றி காணப்படுகின்றனர். இவர்கள் தனிமை, கவலை மற்றும் தற்கொலை எண்ணங்களுடன் வாழ்வதாகக் குறிப்பிடுகின்றார். இத்தரவானது உலகளாவிய ரீதியில் ஒப்பிடுகையில் 10% – 20% இற்கும் இடைப்பட்டு காணப்படுகின்றது.

நிறுவனங்களில் காணப்படும் பல்வேறுபட்ட நிலைமட்டங்களில் பல்வேறுபட்ட அழுத்திகளின் தாக்கத்தை அவதானிக்க முடியும். மனஅழுத்தமானது நிறுவனங்களில் குழு மட்டத்தில் அல்லது தனிநபர் மட்டத்தில் அல்லது நிறுவனத்துக்கு வெளியான மட்டத்தில் ஏற்படலாம் என குறிப்பிடுகிறார் லூதன்ஸ் (2011). நிறுவனங்களில் மன அழுத்தமானது தொழில் பாதுகாப்பின்மை, உயர் மட்ட முகாமையாளர்களின் ஆதரவின்மை மற்றும் பாதகமான வேலை நிபந்தனைகள் போன்ற காரணிகளால் ஏற்படுகின்றன. குழு மட்டத்திலான அழுத்தங்களானது குழு உறுப்பினர்களுக்கிடையிலான கருத்து முரண்பாடுகள், தொடர்பாடல் மற்றும் ஒருங்கிணைப்பு பற்றாக்குறைகள், தொழிற்சுமை பகிர்வில் சமத்துவமின்மை போன்ற காரணிகளால் ஏற்படலாம். தனிநபர் மட்ட அழுத்திகளானது தனியாள் ஆளுமை, ஒழுங்குமுறையான வாழ்க்கை பொறிமுறைகள் மற்றும் அழுத்தங்கள் மீதான தனிநபரின் பார்வை போன்ற காரணிகளுக்கு ஏற்ப வேறுபடும். வெளியக நிறுவனக் காரணிகளான தொழில் சார் சூழலுக்கு வெளிப்பட்ட குடும்ப சிக்கல்கள், நிதி சிக்கல்கள், ஆரோக்கியம் சார்ந்த அக்கறைகள் போன்ற காரணிகள் தனிநபர்களின் மன அழுத்த மட்டங்களில் தாக்கம் செலுத்துகின்றன. பல்வேறு அழுத்த மட்டங்கள் மற்றும் அதன் மூலங்களை இனங்காணுதல் ஓர் நிறுவனத்துக்கு, அந்நிறுவனத்தை சார்ந்த நபர்களுக்கு ஏற்படும் மன அழுத்தத்தை கட்டுப்படுத்தவும் ஊழியர் நலனை மேம்படுத்தவும் உதவுகின்றன.

லூதன்ஸ் (2011), மன அழுத்தமானது ஓர் தனிநபர்க்கு உளவியல், உடலியல் ரீதியான மற்றும் நடத்தை சார்ந்த விளைவுகளை ஏற்படுத்துவதாக குறிப்பிடுகிறார். உளவியல் சார்ந்த விளைவுகளாக கவலை, மனச்சோர்வு மற்றும் உணர்வுகளை வெளிப்படுத்துவதில் மந்தநிலை போன்ற விளைவுகளைக் குறிப்பிடலாம். தனிநபர் மன அழுத்தத்தை எதிர்கொள்ளும் போது தனது உணர்வுகளை கட்டுப்படுத்த தவறுகின்றனர். இதன் காரணமாக தன்னை ஆதரவற்றவராக, நம்பிக்கையற்றவராக மற்றும் சுயமரியாதை குன்றியவராக உணர்கிறார். இவ் விளைவானது, தொழில் திருப்தியை குன்ற செய்யும் அதே சமயம் செயற்திறனையும் மந்தமடைய செய்கிறது.

உடலியல் ரீதியான விளைவுகளாக உடல்நலச்சிக்கல்களான இதய நோய்கள், தசைசார் பிரச்சினைகள் மற்றும் இரைப்பை குடல் சார் பிரச்சினைகள் போன்றன குறிப்பிடப்படுகின்றன. வெகு நாட்களாக காணப்படும் மன அழுத்தமானது ஒருவரின் வாழ்க்கைத் தரத்தை குறைக்கும். ஒருவர் மன அழுத்தத்தோடு இருந்தால் அவரது சுவாச அமைப்பு உடனடியாக பாதிப்படையும். மூச்சு விடுவதற்கு சிரமப்படுவர். ஒட்சிசன் பற்றாக்குறையால், இரத்த ஓட்டம் சீராக இருக்காது. மூச்சை உள் இழுப்பதற்கே சிரமமாக இருக்கும். ஒருவர் மிகுந்த பதற்றத்தோடு இருந்தாலும் இது போன்ற அறிகுறிகள் ஏற்படும். மன அழுத்தத்தால் தசை மற்றும் எலும்பு பகுதிகளும் பாதிப்படையும். இயல்பாகவே உடலின் சதைப் பகுதி, உடலின் உட்புற பாகங்களைப் பாதுகாக்கும் வண்ணம் அமைந்துள்ளது. ஆனால், மன அழுத்தம் ஏற்பட்டால் தசைப் பகுதிகள் வலுவிழக்கும் மற்றும் தோள் பட்டை, கழுத்து, முதுகு பகுதிகளில் வலி ஏற்படும். தலைவலி பலமாக இருக்கும். மன அழுத்தத்தினால் இரத்த ஓட்டம் அதிகமாகும். மனம் திரும்ப பழைய நிலைக்கு வந்துவிட்டால், சரியாகிவிடும். ஆனால் தொடர்ந்து ஒரு நபர் ஒரே விடயத்தாலோ அல்லது ஒரே அளவில் மன அழுத்தத்தில் இருந்தால், மாரடைப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது. மன அழுத்தத்தினால் நாளமில்லா அமைப்பு பாதிக்கப்படும். நாளமில்லா அமைப்பு உடலில் அதிக வேலை செய்கிறது. சிந்தனை, திசுக்களின் செயற்பாடுகள், மெட்டாபாலிஸம் இதனால் பாதிக்கப்படும். மூளையில் உள்ள ஹைப்போதலாமஸ், நாளமில்லா அமைப்புடன் நரம்பு மண்டலத்தை இணைக்கிறது. மன அழுத்தம் ஏற்படும்போது இதுதான் கார்டி சோலை தூண்டுகிறது. மன அழுத்தம் ஏற்படும்போது இரைப்பை, குடலில் பாதிப்புகளும் ஏற்படும். சரியான செரிமானம் இருக்காது. மன அழுத்தத்தின் போது உணவுப் பழக்கம் மாறும். அதை இரைப்பை ஏற்காது. இதனால் வயிற்று வலி, வாந்தி மற்றும் குமட்டல் போன்ற பிரச்சினைகள் ஏற்படும். மன அழுத்தத்தின் விளைவாக இனப்பெருக்க அமைப்புகள் பாதிக்கப்படும். பெண்களுக்கு மாதவிடாய் பிரச்சனைகள் ஏற்படும். மன அழுத்தம், நோய் எதிர்ப்பு சக்தி அமைப்பை அழித்து விடும். இதனால் எமது உடல் பக்றீரியா மற்றும் வைரஸுடன் போராட முடியாமல் பலவீனமாகிப் போய்விடும்.



உலகெங்கும் மக்கள் மத்தியில் மன அழுத்தம் தொடர்பான உபாதைகள் நாளாந்தம் அதிகரித்து வருவதாக மருத்துவ நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். மன அழுத்தத்தினால் பாதிக்கப்படுபவர்கள் நிம்மதியற்ற வாழ்க்கையையே வாழ்ந்து வருவதுடன், கடுமையான மனஅழுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களில் சிலர் தங்களது உயிரையே மாய்த்துக் கொள்ளும்படியான பரிதாப நிலைமைக்கு உள்ளாகின்றனர். மனஅழுத்தத்தினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை உலகநாடுகள் அனைத்திலும் அதிகரித்து வருகின்றது. இலங்கையும் அதற்கு விதிவிலக்கு அல்ல. மனஅழுத்தம் என்பது ஒரு உளப்பாதிப்பு ஆகும். ஒரு மனிதனுக்கு உடல் ரீதியில் ஏற்படுகின்ற பாதிப்புகளை வெளித்தோற்றத்தில் கண்டறிந்து கொள்ளலாம். ஆனால் உளரீதியில் ஏற்படுகின்ற பாதிப்புகளை வெளித்தோற்றத்தில் கண்டறிந்து கொள்வது மிகவும் அரிதானது. எனவேதான் மனஅழுத்தம் போன்ற பாதிப்புக்கு உள்ளாகியோரில் அநேகப் பேர் எமது சமூகத்தில் வெளியே தெரியாதவர்களாக உலவிக் கொண்டிருக்கிறார்கள். அதே வேளை மனஅழுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களில் பலர் மருத்துவ சிகிச்சைக்கும் செல்வதில்லை. மருத்துவர்களிடம் செல்வதற்கே அவர்கள் தயங்குகின்றனர். மனஅழுத்தத்தினால் தாங்கள் பாதிக்கப்பட்டுள்ளமை குறித்து அவர்களுக்கே தெரிவதுமில்லை. மன அழுத்தம் என்பது மனிதனுக்கு இயல்பான ஒன்றுதான். மனிதனுக்கு உணர்ச்சிகள் அதிகமாவதும், ஒரு சில நேரங்களில் உணர்ச்சியற்று இருப்பதும் பொதுவான ஒன்று.

மனிதனுக்கு மனஅழுத்தம் என்பது பல காரணங்களால் ஏற்படும். சுற்றுப்புறத்தில் இருந்து வரலாம், நம் உடலில் இருந்தே வரலாம். முதலில் அனைவரும் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். நாம் மன அழுத்தத்தை ஒரு பொருளாக பார்க்க வேண்டும். மன அழுத்தம் ஏன் ஏற்படுகிறது, ஒரு விடயத்தைக் குறித்து பதற்றப்படும்போதுதான் மன அழுத்தம் பெறுகிறது. எனவே, நமக்கு இது ஓர் முன்னறிவிப்பு எனக் கருதி, எதைக் குறித்து நாம் பயப்படுகிறோமோ, எதைக் குறித்து பதற்றப்படுகிறோமோ, அதை எப்படி சரி செய்வது, எப்படி அதில் வெற்றியடைவது என அதிக கவனம் செலுத்த வேண்டும். முடிந்த அளவு மன அழுத்தம் ஏற்படாதவாறு சிந்தனையை பார்த்துக்கொள்ள வேண்டும். அப்படியே குழப்பம் ஏற்பட்டாலும் **இது** positive தான் எனச் சொல்லிக்கொண்டு வேலையைத் தொடர வேண்டும், ஏனென்றால், மன அழுத்தத்தால் உடலில் பல்வேறு மாற்றங்கள் ஏற்படும். இந்த மாற்றங்கள் பாதிப்பாகவும் மாறும் மன அழுத்தத்தைக் குறைக்க வேண்டியது அவசியம். இல்லையேல் நமது வாழ்வின் முன்னேற்றத்தில் அது முட்டுக் கட்டையாகவே இருந்து கொண்டிருக்கும்.

மு.அ.நிரோஷ்னா
ஆய்வுகூட உதவியாளர்,
மீன்பிடியியல் துறை,
விஞ்ஞான பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியின் உண்மைச் சொரூபம் மனதில் இருந்து வெளிப்படும்போது அன்பின் உணர்வும் தானே வெளிப்படும். - யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழர்களின் நிர்வாக கட்டமைப்பு சிதைந்தபோது...

சமகாலத்தில் தமிழ் மக்களின் நிலைமை எப்படியாக உள்ளதென்பதை அனைவரும் நன்கு அறிவர்.

எந்த நல்ல காரியத்தைச் செய்தாலும் அதற்கு எதிராக விமர்சனம் செய்வதிலேயே சிலர் கண்ணும் கருத்துமாக இருக்கின்றனர்.

அதாவது நல்லதைப் பாராட்டுவதற்குப் பதிலாக, நல்ல காரியங்களைத் தூற்றி வசைபாடுவதில் சிலர் கடுமையாக ஈடுபட்டு வருவதால், எங்கள் தமிழ் இனத்தின் நிலைமை இன்னும் மோசமாகி வருகிறது.

ஆம், விமர்சனங்கள் கடுமைப்படும்போது சமூக சேவை செய்கின்றவர்கள் ஒதுங்கிக் கொள்வர்.

இந்நிலைமை எங்கள் இனத்தை எங்கே கொண்டு போய் நிறுத்தும் என்பதை நாம் ஒரு கணம் சிந்தித்தாக வேண்டும்.

இருந்தும் அவ்வாறான சிந்தனைக்கு இம்மியும் இடமில்லாமல் அவரவர் தத்தம் பாட்டில் விமர்சிக்கத் தலைப்பட்டுள்ளனர்.

இதற்கும் மேலாக, இப்போது பாராளுமன்றத்தில் எங்கள் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களின் நிலைமை எப்படியாக உள்ள தென்பதை நாம் கூறி யாரும் தெரிந்து கொள்ள வேண்டிய தேவையில்லை.

உண்மை. எங்கள் தொடர்பில் பாராளுமன்றத்தில் பேசப்பட வேண்டிய பிரச்சினைகள் எவ்வளவோ உண்டு.

ஆனால் பேசப்படுகின்ற விடயம் என்ன என்பதை ஒரு கணம் அவதானித்தால் நிலைமை புரியும்.

ஆக, எங்கள் தமிழினத்தின் சமகால நிலைமை மிகவும் மோசமாக உள்ளதென்பதை நாம் உணர்ந்தாக வேண்டும்.

அதேநேரம் இவ்வாறானதொரு கந்தறு நிலைமை ஏற்படுவதற்கான காரணம் என்ன என்று ஆராயும்போது, எங்கள் தமிழ் அரசியல் தரப்புகளிலும் எங்கள் அரச நிர்வாகக் கட்டமைப்புகளிலும் ஏற்பட்ட பிறழ்வுகளே காரணம் என்று உணரப்படும்.

அதாவது தமிழ் மக்கள் நீண்ட நெடுங்காலம் நம்பி வாக்களித்த அரசியல்வாதிகள் சுயஇலாப அரசியலை முன்னெடுத்தனர்.

அதற்கும் மேலாக, ஒற்றுமையாக நின்று தமிழ் இனத்தின் உரிமையை வென்றெடுக்க வேண்டிய இவர்கள், கன்னை பிரிந்தனர். கட்சிக்குள் பிளவை ஏற்படுத்தினர். ஒருவரை ஒருவர் அறுத்துக் கழுவினர்.

இவர்களின் திருகுதாளங்களால் விரக்தியடைந்த தமிழ் மக்கள்; முன்னெப்போதும் இல்லாதவாறு அரசியல் மாற்றத்தைச் சடுதியாக ஏற்படுத்தினர்.

தமிழ் மக்கள் ஏற்படுத்திய இந்த சடுதியான மாற்றம் என்பது தமிழ் இனத்தில் நீண்டு நிலைத்திருந்த தமிழ் அரசியல் கட்சிகளுக்குத் தக்க பாடம் புகட்டுவதை மையமாகக் கொண்டிருந்தது என்பது இங்கு ஈண்டு கவனிக்கத் தக்கது.

அவ்வாறு தமிழ் மக்கள் புகட்டிய பாடத்தை இன்னும் எங்கள் தமிழ் அரசியல்வாதிகள் கற்றறிந்ததாகத் தெரியவில்லை.

அதேநேரம் தமிழ் மக்களால் ஏற்படுத்திய அரசியல் மாற்றத்தாலும் நன்மை விளையப் போவதில்லை என்பதும் இங்கு கூறப்பட வேண்டிய விடயம்.

அதேவேளை எழுந்தமானமாக நடந்து கொண்ட தமிழர் பிரதேசத்து அரச நிர்வாகமும் இப்போது மானம் மரியாதை இழந்து பெரும் சபைகளில் நாணிக் கோணி நிற்கிறது.

இதைக் கூறும்போதுதான் வேதனை தாளாமல் மனம் விக்கித்துக் கொள்கிறது.

# தென்னை செய்கையை அபிவிருத்திசெய்ய அரசிடம் சரியான கொள்கை இல்லை

### சபையில் பிரதமர் ஹரிணி அமரசூரிய

(கொழும்பு)

தென்னைச் செய்கையை அபிவிருத்தி செய்வதற்கான சரியான அரசாங்கக் கொள்கையின்மையே நாட்டில் ஏற்பட்டுள்ள தேங்காய் பற்றாக்குறைக்கு காரணம் என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்றைய அமர்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் தேங்காய் பற்றாக்குறை நிலவிவரும் நிலையில், தென்னை சாகுபடியை மேம்படுத்த இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் கூடுதல் நிதியை ஒதுக்கியுள்ளதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், பெருந்தோட்டங்கள் மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்கள் தேங்காய் உற்பத்தியை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறித்த நடவடிக்கைகளில் அதிக விளைச்சல் தரும் தேங்காய் வகைகளுக்கான சோதனை, வினைத்திறனான விவசாய நடவடிக்கைகளை இனங்காணல் மற்றும் நோய்த் தாக்கங்களுக்கு தொழில்நுட்ப ரீதியாக தீர்வு காணல் ஆகிய செயற்பாடுகள் உள்ளடங்குவதாகவும் தெரிவித்துள்ளார். (ம-7)

# மாற்றுக் காணிகள் வேண்டாம் எங்கள் காணிகளே வேண்டும்

### ஆளுனரிடம் இடித்துரைத்த தையிட்டி காணி உரிமையாளர்கள்

எமக்கு மாற்றுக்காணிகள் தர எத்தனிக்க வேண்டாம் எமக்கு எங்கள் காணிகளே வேண்டும் என வடமாகாண ஆளுநர் வேதநாயகத்திடம் தையிட்டி திஸ்ஸ விகாரை கையகப்படுத்தியுள்ள காணிகளின் உரிமையாளர்கள் உறுதிபடத் தெரிவித்துள்ளனர்.

ஆளுநருடன் வடமாகாண செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றின் போதே அவர்கள் குறித்த விடையத்தினை தெரிவித்துள்ளனர்.

காணி உரிமையாளர்கள் குறித்த கூட்டத்தின் பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில், தற்போது தையிட்டி திஸ்ஸ விகாரை கையகப்படுத்தியுள்ள நிலங்களுக்குப் பதிலாக விகாரைக்குச் சொந்தமான வேறு காணிகளை எமக்குத் தருவதற்கு முனைகின்றனர்.

அது பாரிய சிக்கல் நிறைந்த ஒன்றாகும். தற்போது எமக்குத் தருவதாகச் சொல்லப்படும் விகாரையின் காணிகளின் உறுதிகளிலும் சிக்கல்கள் காணப்படுகின்றன.

ஆகவே எமக்கு மாற்றுக் காணி தருவதை விடுத்து எமது காணிகளை விகாரையின் பிடியில் இருந்து விடுவிக்க ஆவண செய்ய வேண்டும் என கோரிக்கை விடுத்தனர். (ம-7)

# நல்லூரிலிருந்து காலிச் சிவன் நோக்கிய தரிசன யாத்திரை

இலங்கை முதல் உதவிச் சங்க இந்துசமயத் தொண்டர் சபை இலங்கையில் நிரந்தர அமைதி, சாந்தி, சமாதானம், நல்லிணக்கம், இனங்களுக்கு இடையேயான பேதங்கள் நீங்கி ஒற்றுமை வளர இறையருள் வேண்டி நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்திலிருந்து காலி சிவன் ஆலயம் வரை முன்னெடுக்கும் புனித திருத்தலத் தரிசன யாத்திரையானது இன்று வெள்ளிக்கிழமை காலை-06.30 மணியளவில் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்திலிருந்து ஆரம்பமாகவுள்ளது. (ம-7)

# சட்டமா அதிபருக்கு எதிராக குற்றப்பத்திரம் கொண்டு வருக

### பிரதமரிடம் லசந்தவின் மகள் கோரிக்கை

(கொழும்பு)

ஊடகவியலாளர் லசந்த விக்கிரதுங்கவின் கொலை தொடர்பில் கைதான சந்தேக நபர்களினை விடுவிக்குமாறு நீதிமன்றுக்கு சட்ட மா அதிபர் பரிந்துரைத்தமை பாரிய அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ள நிலையில் சட்டமா அதிபருக்கு எதிராக குற்றப்பிரேரணை கொண்டுவரப்பட வேண்டும் என லசந்த விக்ரமதுங்கவின் மகள் பிரதமருக்கு கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இது சட்டமா அதிபரின் அதிகார துஷ்பிரயோகம் மற்றும் கடமையான கடமைத் தவறுதல் குறித்ததாகும்.

எனவே அவருக்கு எதிராக குற்றப்பிரேரணை கொண்டுவரப்பட வேண்டும்.

வழக்கு தொடர்பான சமீபத்திய விசாரணையில் சந்தேக நபர்களாகப் பெயரிடப்பட்ட மூன்று பேரை கல்கிசை நீதவான் நீதிமன்றம் விடுதலை செய்ய சட்டமா அதிபர் பரிந்துரைத்தமை குறித்து தான் மிகவும் கவலையடைகிறேன் என்றுள்ளது. (ம-7)

# கிளிநொச்சிக்கு குறைந்தளவு நிதி

### இடைக்கால பட்ஜெட்டில் ஒதுக்கீடு

(கொழும்பு)

இடைக்காலக் கணக்கறிக்கையில் கிளிநொச்சிக்கே மிகக் குறைந்தநிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

2025 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படாதநிலையில் ஜனவரி முதல் ஏப்ரல் வரையான காலப் பகுதிக்கான இடைக்கால கணக்கறிக்கை நிறைவேற்றப்பட்டு அதன்மூலம் நிதிக் கையாளுகை இடம்பெறுகின்றது.

அதன் பிரகாரம் நாட்டில் அனைத்து மாவட்டங்களின் அபிவிருத்திக்காகவும் குறிப்பிட்டளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு அனைத்து மாவட்டங்களுக்கும் விடுவிக்கப்பட்டுள்ள நிதியில் கிளிநொச்சி மாவட்டத்துக்கே மிகக்குறைந்தளவு நிதி ஒதுக்கிடப்பட்டுள்ளது. இதற்கமைய கிளிநொச்சி மாவட்டத்துக்கு 13 மில்லியன் ரூபா மாத்திரமே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதேவேளை வடக்கின் ஏனைய மாவட்டங்களான யாழ்ப்பாண மாவட்டத்துக்கு 56 மில்லியன் ரூபாவும் முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களுக்குத் தலா 26 மில்லியன் ரூபா வீதமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (ம-7)

# மோ. சைக்கிளில் திடீர் தீப்பரவல்

வவுனியாவில் மோட்டார் சைக்கிள் ஒன்று திடீரென தீப்பற்றி எரிந்த சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

நேற்று வவுனியா மகா வித்தியாலயத்துக்கு அருகில் இடம்பெற்ற குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா நகரப் பகுதியில் இருந்து மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் ஒருவர் வவுனியா மகா வித்தியாலயத்துக்கு அருகில் தரித்து நின்றுள்ளார்.

பின்னர் மீண்டும் பயணத்தை தொடரும் பொருட்டு மோட்டார் சைக்கிளை இயக்க முற்பட்ட வேளையே குறித்த அசம்பாவிதம் சம்பவித்துள்ளது.

சாரதி, அப்பகுதி மக்கள் இணைந்து தீயை கட்டுப்படுத்திய போதிலும் வாகனம் பகுதியளவில் தீயினால் எரிந்து நாசமாகியுள்ளது.

தீப்பரவலுக்கான காரணம் இதுவரை வெளியாகவில்லை. (ம-7,250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நடக்கவிருக்கும் உள்ளூராட்சி சபைத்தேர்தலில் போட்டியிட இருக்கும் இளம் சமூகத்தினருக்கான தெளிவூட்டல் பகுதி - II

15

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம், தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

தேர்தலின் பின் வவுனியா மாவட்ட உள்ளூராட்சி சபைகளின் அதிகாரங்கள் பின்வருமாறு கட்சிகளினால் கையேற்கப்பட்டன.

மொத்தமாக 30 உறுப்பினர்களைக் கொண்ட வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையில் அதிகூடிய (11) ஆசனங்களைப் பெற்ற (37 சதவீதம்) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அமைத்தது. தவிசாளராக துரைச்சாமி நடராஜசிங்கம் தெரிவு செய்யப்பட்டார்.

மொத்தமாக 18 உறுப்பினர்களைக் கொண்ட வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபையில் அதிகூடிய (9) ஆசனங்களைப் பெற்று (50 சதவீதம்) இலங்கை பொதுசன பெரமுன ஆட்சி அமைத்தது. தவிசாளராக சுபசிங்ஹ முதியன்சேலாகே கசுன் தியாகஸ்ரீ பண்டார அலகல்ல தெரிவு செய்யப்பட்டார்.

மொத்தமாக 26 உறுப்பினர்களைக் கொண்ட வவுனியா வடக்கு பிரதேச சபையில் அதிகூடிய (8) ஆசனங்களைப் பெற்ற (31சதவீதம்) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அமைத்தது. தவிசாளராக சபாரத்தினம் தணிகாசலம் தெரிவு செய்யப்பட்டார்.

மொத்தமாக 19 உறுப்பினர்களைக் கொண்ட வெங்கலச் செட்டிகுளம் பிரதேச சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிகூடிய (5) ஆசனங்களைப் பெற்றிருந்தாலும் (26 சதவீதம்) 3 ஆசனங்களைப் பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சி அமைத்தது. தவிசாளராக ஆசிர்வாதம் அந்தோனி தெரிவு செய்யப்பட்டார்.

மொத்தமாக 21 உறுப்பினர்களைக் கொண்ட வவுனியா நகர சபையில் அதி கூடிய (8) ஆசனங்களைப் பெற்றிருந்தாலும் (38 சதவீதம்) 3 ஆசனங்களைப் பெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணி (ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி) ஆட்சி அமைத்தது. தவிசாளராக பட்டியலிருந்து தெரிவு செய்யப்பட்ட இராசலிங்கம் கௌதமன் பதவி ஏற்றார்.

**தேர்தலின் பின் முல்லைத்தீவு மாவட்ட உள்ளூராட்சி சபைகளின் அதிகாரங்கள் பின்வருமாறு கட்சிகளினால் கையேற்கப்பட்டன.**

மொத்தமாக 13 உறுப்பினர்களைக் கொண்ட மாந்தை கிழக்கு பிரதேச சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிகூடிய (6) ஆசனங்களைப் பெற்றிருந்தாலும் (46 சதவீதம்) 4 ஆசனங்களைப் பெற்ற ஐக்கிய தேசியக் கட்சி (ஐக்கிய தேசிய முன்னணி) ஆட்சி அமைத்தது. தவிசாளராக மகாலிங்கம் தயானந்தன் பதவி ஏற்றார்.

மொத்தமாக 13 உறுப்பினர்களைக் கொண்ட துணுக்காய் பிரதேச சபையில் அதி கூடிய (6) ஆசனங்களைப் பெற்ற (46 சதவீதம்) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அமைத்தது. தவிசாளராக அம்பலவாணர் அமிர்தலிங்கம் தெரிவு செய்யப்பட்டார்.

மொத்தமாக 22 உறுப்பினர்களைக் கொண்ட புதுக்குடியிருப்பு பிரதேச சபையில் அதிகூடிய (11) ஆசனங்களைப் பெற்ற (50 சதவீதம்) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அமைத்தது. தவிசாளராக செல்லையா பிறேமகாந் தெரிவு செய்யப்பட்டார்.

மொத்தமாக 24 உறுப்பினர்களைக் கொண்ட கரைத்துறைப்பற்று பிரதேச சபையில் அதிகூடிய (9) ஆசனங்களைப் பெற்ற (38 சதவீதம்) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அமைத்தது. தவிசாளராக கனகையா தவராசா தெரிவு செய்யப்பட்டார்.

குறிப்பாக வடக்கு கிழக்கில் பெரும்பாலான சபைகளில் எந்தக் கட்சிக்கும் தனிப் பெரும்பான்மை இல்லாத ஒரு தொங்கு நிலையை, இந்த தேர்தல் முடிவுகளை கணிக்கும் முறை ஏற்படுத்தியுள்ளதாக அரசியல் தலைவர்களும், தேர்தல் ஆணைய உறுப்பினர்களும் குறைபட்டிருக்கிறார்கள். இலங்கையின் தென்பகுதியில் மகிந்த ராஜபக்ஸவின் கட்சி பல இடங்களில் தெளிவான பெரும்பான்மையை பெற்றிருந்தால் அங்கு இது பெரும் சிரமங்களை ஏற்படுத்தவில்லை.

**உள்ளூராட்சி சபைகளில் பெண்களின் பிரதிநிதித்துவம்**

இலங்கையின் 1978 ஆம் ஆண்டு அரசியல் அமைப்பின் 12 (2) உறுப்புரையில் ஆண் பெண் சமத்துவம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி ஆண் - பெண் பால் நிலையின் காரணமாக எந்த பிரஜைக்கும் வேறுபாடுகள் காட்ட முடியாததோடு, அனைத்து அடிப்படை உரிமைகளும் ஆண் - பெண் ஆகிய இரு சாராரும் எவ்வித வேறுபாடுகளும் இன்றி அனுபவிக்க முடியும் என்கிறது.

பெண்களுக்கும் ஆண்களைப் போலவே சிந்தனை செய்தல், கருத்து வெளியிடல், அமைதியாக ஒன்று கூடல், அரசியல் கட்சி, அரசசார்பற்ற நிறுவனம், கூட்டமைப்புகள் மற்றும் தொழிற்சங்கங்களில் தொடர்பு கொள்ளல் மற்றும் அதன் செயற்பாடுகளில் ஈடுபடவும் உரிமையுண்டு. மேலும் வாக்களித்தல், பிரதிநிதித்துவம், தேர்தல் நடவடிக்கை, அரச கொள்கை உருவாக்கம் மற்றும் அதனை நடைமுறைப்படுத்தலில் பங்குபற்றல் மற்றும் சட்டத்தின் முன் சமமான கவனிப்பு போன்ற உரிமைகள் என்பன இலங்கை பெண்களுக்கும் உரித்தாக்கப்பட்டுள்ளன.

இலங்கையைப் பொறுத்த வரை அரசியலில் பெண்களின் பங்களிப்பு மிகவும் குறைந்த மட்டத்தில் இருப்பதற்கான காரணிகள் பலவுள்ளன. இலங்கைப் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தில் தாக்கம் செலுத்தும் தடைகளை சமூக மற்றும் கலாசார, அரசியல், பொருளாதார, தனிப்பட்ட மற்றும் உளவியல் ரீதியாக அவற்றை வகைப்படுத்தி காட்டமுடியும்.

சமூக முறைமை அதனோடிணைந்த சம்பிரதாய மனப்பாங்கு, ஒழுக்கம், நம்பிக்கை மற்றும் எதிர்பார்ப்புக்கள், ஆண் -பெண் சமூக பிரதிநிதித்துவ செயற்பாடுகளின் மாற்றம், பெண்களுக்கு பொது செயற்பாடுகள் தொடர்பில் காணப்படும் குறைவான அனுபவம் மற்றும் பயிற்சி, மகப்பேற்று பொறுப்பு மற்றும் சம்பிரதாயமாக பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ள குடும்ப பொறுப்புகள், குறைவான சுதந்திரம், குறைவான வாய்ப்புகள் மற்றும் சமூக மற்றும் கலாசார தடைகள் என்பன இதில் ஆதிக்கம் செலுத்துகின்றன.

அரசியல்வாதிகள் தொடர்பாக சமூகத்தில் நிலவும் கருத்துக்கள் பெண்கள் அரசியலிற்குள் நுழைவதற்கு பெரும் தடைக்கல்லாக வுள்ளது. அத்துடன் பெண்களைப் பற்றி ஒழுக்கமாக பேசுவதற்கான ஒரு இடமாக இலங்கை அரசியல் காணப்படவில்லை.மேலும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளே அவர்களின் அரசியல் பங்களிப்பை தடுக்கும் முக்கிய காரணியாக இருப்பதாக இலங்கை பாலின அடிப்படையிலான வன்முறை எதிர்ப்பு அமைப்பு கூறுகின்றது.

துன்புறுத்தல், பாலியல் லஞ்சம், மிரட்டுதல் , உடல் ரீதியாக தாக்கப்படுதல், எச்சரிக்கைகள், நிதி ரீதியான அழுத்தங்கள், பண்பற்ற முறையிலான ஊடக தகவல்கள் மற்றும் சமூக வலைத் தளங்களில் சேறு பூசப்படுதல் போன் றவை இந்த அமைப்பினால் பெண் களுக்கு எதிரான வன்முறைகளாக சுட்டிக்காட்டப்படுகின்றன.

இலங்கை அரசியல் அமைப்பு, ஆண்-பெண் பாகுபாடற்ற சமத்துவத்தை உறுதி செய்கிறது. என்றாலும், நடைமுறையில் அத்தகைய சமத்துவம் உறுதிப்படவில்லை என்பதே உண்மை. தேர்தல்களில் வேட்பாளர்களை நியமிப்பதில் அரசியல் கட்சிகள் மிகவும் முக்கியமான பங்கினை வகிக்கின்றன. கட்சியின் அதிஉயர் மட்டத்தில் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படுகிறது. கட்சியின் கொள்கைகளின் மீது அர்ப்பணிப்பு, கட்சிச் செயற்பாடுகளில் ஈடுபாடு அல்லது அரசியல் தேவைகள் ஆகியவற்றின் அடிப்படையில் வேட்பாளர்கள் தெரிவு செய்யப்படுகின்றார்கள்.

இலங்கையில் உள்ள அரசியல் கட்சிகள் அனைத்தும் மகளிர் அணிகளைக் கொண்டுள்ளன. பெண்களின் அரசியல் பங்களிப்பு இந்த மகளிர் அணிகளுக்கு ஊடாகவே செயற்படுகின்றன. ஆனால் இந்த மகளிர் பிரிவுகள் கட்சியின் ஆண் வேட்பாளர்களுக்கு தேர்தல்களில் பெண்களின் ஆதரவுகளைப் பெறுவதற்காகவே செயற்படுகின்றன. நலப்பணிகள் செயற்பாடுகள், நிதிதிரட்டல் ஆகியவை தொடர்பாகவே அவர்களது பிரதான செயற்பாடுகள் அமைந்துள்ளன. கூட்டங்களில் பின்னணி ஆதரவை வழங்குதல், ஊர்வலங்களில் செல்லுதல் ஆகியவற்றிலும் அவர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

இவற்றைக் கருத்திற்கொண்டு ஒவ்வொரு உள்ளூராட்சி சபையிலும் இருக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கையில் 1/4 பங்கு அதாவது 25% பெண் பிரதிநிதித்துவத்தினை உறுதிப்படுத்த வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

**2018 ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தலில் யாழ் மாவட்டத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம்**

யாழ்ப்பாணம் மாநகர சபையில் நல்லூர் இராசதானி வட்டாரத்திலிருந்து இராமலிங்கம் இராகினி, சங்கிலியன் தோப்பு வட்டாரத்திலிருந்து மதிவதனி விவேகானந்தராசா, குருநகர் வட்டாரத்திலிருந்து யேசுராஜா மேரி அஞ்சலா ஆகிய மூன்று பெண்கள் வட்டார ரீதியில் தெரிவுசெய்யப்பட்டனர். பட்டியலிலிருந்து நளினா பிறேம்லால், சுகந்தினி சிறிகரன், அஜந்தா தனபாலசிங்கம், சுபாஜினி அன் ரனி பனாட்சா, பரமலிங்கம் அனுசியா, பற்குணராசா யோகேஸ்வரி, ஜெயந்தினி நாகேஸ்வரன், விக்னேஸ்வரலிங்கம் விஜயதட்சனி என எட்டு பெண்கள் தெரிவு செய்யப்பட்டனர். (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முப்படைத்...

நாயக்கவை சந்தித்தனர்.

புதிய இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லசந்த ரொட்ரிகோ, புதிய கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் காஞ்சன பானகொட, புதிய விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் வாசு பந்து எதிரிசிங்க ஆகியோர் ஜனாதிபதியைச் சந்தித்தனர்.

பதவியேற்ற பின்னர், முப்படைத் தளபதிகள் சம்பிரதாயபூர்வமாக ஜனாதிபதியைச் சந்தித்ததோடு ஜனாதிபதிக்கு நினைவுப் பரிசுகளையும் வழங்கினர். (ம-7)

## எனக்கு...

யாது என முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களை நடத்த சதி செய்ததாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மீது அசாத் மௌலானா சுமத்திய குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளித்த கோட்டாபய இவ்வாறு தெரிவித்துள்ளார்.

'தயவுசெய்து ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையைப் படியுங்கள். சிஐடி அதிகாரிகள் அளித்த சாட்சியங்கள் உட்பட, அந்த அறிக்கையில் உள்ளதைத் தவிர வேறு எதுவும் எனக்குத் தெரியாது," என்று தெரிவித்துள்ளார். (ம-7)

## மேல் முறையீட்டு...

உச்ச நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியுள்ளது.

அதன்படி, மேல்முறையீடுகள் ஓகஸ்ட் 25, 2025 அன்று பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள உத்தரவிடப்பட்டது.

குறித்த வழக்கு நேற்று நீதிபதிகள் பிரீதி பத்மன் சூரசேன, ஜனக் டி சில்வா மற்றும் சம்பத் அபேகோன் ஆகிய மூவரடங்கிய உச்ச நீதிமன்ற நீதிபதிகள் குழாம் முன் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (ம-7)

## ஐ.எம்.எப்...

விற்கும் சர்வதேச நாணய நிதியத் தூதுக் குழுவினருக்கும் இடையில் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் கலந்துரையாடலொன்று நடைபெற்றது.

சர்வதேச நாணய நிதியத்தால் இலங்கைக்கு வழங்கப்படும் 3 பில்லியன் டொலர் நீட்டிக்கப்பட்ட கடன் திட்டத்தின் கீழ் மூன்றாவது மீளாய்வின் பின்னர் அதிகாரிகள் மட்ட உடன்பாட்டை அரசாங்கம் எட்டியுள்ளது.

இந்த மீளாய்வின் விடயங்கள் இந்த வருடம் பெப்ரவரி மாத இறுதியில் சர்வதேச நாணய நிதிய பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இதுதொடர்பான முன்னேற்றம் மற்றும் எதிர்காலத்தில் அந்தத் திட்டத்தை தொடர்வது குறித்த அரசாங்கத்தின் தலையீடு குறித்தும் இதன் போது ஆராயப்பட்டது.

IMF பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் இலங்கைக்கான நீட்டிக்கப்பட்ட கடனுதவியின் நான்காவது தவணையாக 333 மில்லியன் டொலர் தொகை வழங்கப்படவுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி கிருஷ்ணமூர்த்தி சுப்பிரமணியன் சர்வதேச நாணய நிதியத்தின் மாற்று நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பீ.கே.ஜி. ஹரிஸ்சந்திர பொருளாதார மேம்பாட்டு பிரதி அமைச்சர் கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, நிதி அமைச்சின் செயலாளர் மகிந்த சிறிவர்தன, மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க உள்ளிட்ட பலர் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர். (ம-7)

## பாராளுமன்றை...

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, பிரதமரிடத்தில் கேள்வியெழுப்பி உரையாற்றும் போது, அர்ச்சுனா எம்.பி அமைதியற்ற முறையில் நடந்துகொண்டமையினால் பிரதி சபாநாயகர் இவ்வாறு எச்சரிக்கையை விடுத்தார்.

எதிர்க்கட்சித் தலைவரால் தெரிவிக்கப்பட்ட கருத்தொன்று தொடர்பில் பிரதி சபாநாயகர் தனது நிலைப்பாட்டை அறிவிக்கும்போது, நேற்று முன்தினம் புதன்கிழமை பாராளுமன்றத்தில் அர்ச்சுனா எம்.பியினால் சபாநாயகரைப் பார்த்து வெட்கம் என்று கூறிய வசனத்தை சுட்டிக்காட்டியும் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சபாபீட ஆசனத்தை அவமதிக்கும் வகையில் கருத்து வெளியிட்டுள்ளார். அதே போன்று நேற்று (நேற்று முன்தினம்) எம்.பியொருவர் இந்த ஆசனத்தை பார்த்து "ஷேம்" என்று கூறி அவமதித்துள்ளார். நான் அவ்வேளையில் இந்த ஆசனத்தில் இருந்திருந்தால் அதற்கு எதிராக நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றார்.

இவ்வேளையில், அர்ச்சுனா எம்.பி அது தொடர்பில் ஏதோ கருத்துத் தெரிவிக்க முயன்றதுடன், அமைதியற்ற முறையிலும் நடந்துகொண்டார். இதன் போது ஆசனத்தில் அமருமாறும், சபையின் ஒழுக்கத்தை பேணுமாறும் பிரதி சபாநாயகர் அவரை கேட்டுக் கொண்டார். ஆனால் தொடர்ந்தும் அர்ச்சுனா எம்.பி அமைதியற்ற முறையில் நடந்துகொண்ட நிலையில், நீங்கள் ஆசனத்தில் அமராவிட்டால் படைக்கல சேவிதர்களைகொண்டு சபையிலிருந்து வெளியேற்ற நேரிடும் என்று எச்சரிக்கை விடுத்தார். இதையடுத்து அர்ச்சுனா எம்.பி அமைதியாக இருந்தார். (ம-7)

## மகி...

அதிகாரிகளாகக் குறைப்பதற்கான அரசாங்கத்தின் தீர்மானத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுவை மார்ச் 19ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இந்த மனு நேற்று நீதிபதிகளான பிரீதி பத்மன் சூரசேன, ஜனக் டி சில்வா மற்றும் சம்பத் அபேகோன் ஆகியோர் கொண்ட உயர் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் முன்னிலையில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (ம-7)

## குளிர்காய்வதற்...

இதில் பெரியபண்டி விரிச்சான், மடுவைச் சேர்ந்த மேரி எமில்டா விக்கிரமராணா (வயது-27) என்ற யுவதியே உயிரிழந்தவராவார்.

கடந்த ஜனவரி மாதம் 12ஆம் திகதி குளிர் காரணமாக தீ மூட்டி அடுப்புக் கரையில் குளிர் காய்ந்து கொண்டிருந்தபோது அவர் அணிந்திருந்த நைலோன் ஆடையில் தீ பற்றியதன் காரணமாக தீக்காயங்களுக்குள்ளானார்.

உடனடியாக மடு வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு பின்னர் மன்னார் வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் நேற்று வியாழக்கிழமை யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)


மஹஜன சம்பத — திகதி 2025.02.06 — சீட்டிழுப்பு இலக்கம் 5739 — E 5 0 5 0 4 3
அத சம்பத — E 5 0 4 3 — சீட்டிழுப்பு இலக்கம் 314

தன நிதானய — திகதி 2025.02.06 — சீட்டிழுப்பு இலக்கம் 1769 — T 33 39 65 72 T — 88324

மெகா பவர் — திகதி 06/02/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2087 — Y 18 03 23 42 65

ஜய JAYA — திகதி 2025.02.06 — சீட்டிழுப்பு இலக்கம் 007 — T 1 6 4 8

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3981 — சீட்டிழுப்பு திகதி 06.02.2025 — D 01 12 13 79 — D

HANDAHANA உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2025.02.06 — சீட்டிழுப்பு இலக்கம் 1048 — கன்னி 05 19 27 39 கன்னி — 42543 — 31

உத்தியோகபூர்வ முடிவுகள் — சுபிரி தன சவிய — 08.02.2025 — வெற்றி வாரம் 447 — K 6 6 6 3 4 6 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.30,600,146.00 — 77263

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2713 — சீட்டிழுப்பு திகதி 2025.02.06 — தினம் வியாழக்கிழமை — 01 25 51 76 B — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 84,531,920.00

சனிதா — திகதி 06.02.2025 — வெற்றி வாரம் 4874 — 16 33 62 64 M — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 52,469,063.60 — 71332

சசிரி — வெற்றி வாரம் 616 — சீட்டிழுப்பு திகதி 06.02.2025 — வியாழக்கிழமை — வெற்றி இலக்கங்கள் 12 28 50 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 200,000.00

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4425 — சீட்டிழுப்பு திகதி 06.02.2025 — தினம் வியாழக்கிழமை — 10 32 37 52 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.9,784,111.60 — 103932

கப்ருக — ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — F 05 08 38 60 74 — 1889 — 06.02.2025 வியாழக்கிழமை — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.564,410,014.20

அத கோடிபதி ADA KOTIPATHI — வியாழக்கிழமை — வெற்றி வாரம் 2539 — சீட்டிழுப்பு திகதி 2025.02.06 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.69,275,762.40 — 11 22 49 60 D — 572386


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரகலய...

இலட்சத்து 43 ஆயிரம் ரூபா
குணபால ரத்னசேகர - 14 இலட்சத்து 12 ஆயிரத்து 780 ரூபா
பிரேம்நாத் சி தொலவத்த - 23 இலட்சம் ரூபா
பிரியங்கர ஜயரத்ன - 23 இலட்சத்து 48 ஆயிரம் ரூபா
சம்பத் அத்துகோரள -25 இலட்சத்து 40 ஆயிரத்து 610 ரூபா
ஜயந்த கெட்டகொட - 28 இலட்சத்து 14 ஆயிரத்து 800 ரூபா
விமல் வீரவங்ச - 29 இலட்சத்து 54 ஆயிரம்
பேராசிரியர் சன்ன ஜயசுமன - 33 இலட்சத்து 34 ஆயிரம்
அகில எல்லாவள - 35 இலட்சத்து 54 ஆயிரத்து 250 ரூபா
சமல் ராஜபக்ஸ - 65 இலட்சத்து 39 ஆயிரத்து 374 ரூபா
சந்திம வீரக்கொடி - 69 இலட்சத்து 48 ஆயிரத்து 800 ரூபா
அஷோக்க பிரியந்த - 72 இலட்சத்து 95 ஆயிரம் ரூபா
சமன்பிரிய ஹேரத் - 105.2 இலட்சம் ரூபா
ஜனக்க பண்டார தென்னகோன் - 105.5 இலட்சம் ரூபா
ரோஹித்த அபேகுணவர்தன - 116.4 இலட்சம் ரூபா
விசேட வைத்திய நிபுணர் சீதா அரம்பேபொல - 137.8 இலட்சம்
சஹான் பிரதீப் - 171.3 இலட்சம் ரூபா
ஷெஹான் சேமசிங்க - 185.1 இலட்சம் ரூபா
இந்திக அனுருத்த - 195.5 இலட்சம் ரூபா
மிலான் ஜயதிலக்க - 223 இலட்சம் ரூபா
டொக்டர் ரமேஷ் பத்திரன - 281 இலட்சம் ரூபா
துமிந்த திசாநாயக்க - 288 இலட்சம் ரூபா
கனக ஹேரத் - 292 இலட்சம் ரூபா
டி.பி.ஹேரத் - 321 இலட்சம் ரூபா
பிரசன்ன ரணவீர - 327 இலட்சம் ரூபா
டப்ள்யூ.டி.வீரசிங்க - 372 இலட்சம் ரூபா
ஷாந்த பண்டார - 391 இலட்சம் ரூபா
எஸ்.எம்.சந்திரசேன - 438 இலட்சம் ரூபா
சனத் நிஷாந்த - 427 இலட்சம் ரூபா
சிறிபால கம்லத் - 509 இலட்சம் ரூபா
அருந்திக்க பெர்னாண்டோ - 552 இலட்சம் ரூபா
சுமித் உடுகும்புர - 559 இலட்சம் ரூபா
பிரசன்ன ரணதுங்க - 561 இலட்சம் ரூபா
கோகிலா குணவர்தன - 587 இலட்சம் ரூபா
மொஹான் பி.டி.சில்வா - 601 இலட்சம் ரூபா
நிமல் லன்சா - 692 இலட்சம் ரூபா
அலி ஷப்ரி ரஹீம் - 709 இலட்சம் ரூபா
காமினி லொக்குகே - 749 இலட்சம் ரூபா
ஜொன்ஸ்டன் பெர்னாண்டோ - 934 இலட்சம் ரூபா
கெஹெலிய ரம்புக்வெல்ல - 959 இலட்சம் ரூபாவை நட்டஈடாக பெற்றுள்ளனர்.

இந்த 43 பாராளுமன்ற உறுப்பினர்களும் 122 கோடியே 41 இலட்சத்து 34 ஆயிரத்து 737 ரூபாவை அரசாங்கத்திடமிருந்து நட்டஈடாக பெற்றுக் கொண்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார். (ம-7)

# தோட்டத் தொழிலாளர்களைப் பற்றி பேச உங்களுக்கு அருகதை இல்லை

## ஜீவனை சாடிய அமைச்சர் சந்திரசேகர்



(கொழும்பு)

தோட்ட தொழிலாளர்களுடைய பிரச்சினைகளை கதைப்பதற்கு ஜீவன் தொண்டமானுக்கு எந்த அருகதையும் இல்லை எனவும் தோட்ட மக்களுடைய பிரச்சினைகளை தீர்ப்பதற்கு பொறுப்பான அமைச்சர்கள் இருப்பதாக கடற்தொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

புலமைச் சொத்து சட்டமூலம் தொடர்பான நேற்றைய பாராளுமன்ற அமர்வில் உரையாற்றும் போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் சில காலமாக தேவையில்லாத பயங்களை சிலர் கட்டமைத்து விடுகின்றனர்.

இவ்வாறான பீதிகளை உருவாக்குவதற்கு முக்கிய காரணம் கடந்த 76 வருடங்களாக நாட்டினுடைய சொத்துக்களை சூறையாடியவர்களே இதற்கு காரணகர்த்தா ஆவர் என்று கடற்தொழில் அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்நிலையில் இடைநடுவே மறுத்துப் பேசிய ஜீவன் தொண்டமானுக்கு பதிலளித்த அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் மலையக மக்கள் எப்பொழுதோ உங்களை கைகழுவி விட்டார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## நடுவே பாய...

சபையில் நிறைய சண்டியர்கள் உள்ளனர். ஒருவர் சபாநாயகரைப் பார்த்து "வெட்கம்" என்று கூறினார். ஒருவர் ஆளுங்கட்சி பிரதம கொறடாவுக்கு ஏதோ கூறுகிறார். இப்போது எதிர்க்கட்சித் தலைவர் பிரதி சபாநாயகருக்கு "குறுக்கே பாயாமல் இருங்கள்" என்கிறார். நீங்கள் இந்த வசனத்தை வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டும் அல்லது நீங்கள் பிரதி சபாநாயகரிடம் மன்னிப்பு கோர வேண்டும். இங்கே சண்டித்தனம் கூடாது" என தெரிவித்ததை தொடர்ந்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எழுந்து அவருடன் வாக்கு வாதத்தில் ஈடுபட்டதால் சபையில் அமைதியின்மை ஏற்பட்டது.

இவ்வேளையில் அனைவரையும் அமைதியாக இருக்குமாறு தெரிவித்த பிரதி சபாநாயகர், "நீங்கள் என்னை அவமதிக்கவில்லை. இந்த ஆசனத்தையே அவமதிக்கின்றீர்கள். நேற்று ஒருவர் இந்த ஆசனத்தை பார்த்து "வெட்கம்" என்று கூறி அவமதித்துள்ளார். நீங்கள் அமருங்கள். நான் கூறுவதை கேளுங்கள். இந்த சபையின் ஒழுங்கை பேணுங்கள்" என்றார்.

"எதிர்க்கட்சித் தலைவரான உங்களிடம் இருந்து அந்த வசனம் வெளியானமை தொடர்பில் நான் அதிர்ச்சியடைந்தேன். நீங்கள் என்னை கூறா விட்டாலும் இந்த ஆசனத்திற்கு கூறியுள்ளீர்கள். அதனை நீக்கிக்கொள்ளுங்கள்" என்றார்.

இதன்போது பதிலளித்த எதிர்க்கட்சித் தலைவர், "குறுக்கே பாய வேண்டாம் என்று நான் கூறினேன். அது உங்களை அவமதிப்பதற்கு தெரிவிக்கவில்லை. எனது பேச்சுக்கு தடை ஏற்படுத்த வேண்டாம் என்ற கருத்திலே தெரிவித்தேன். என்றாலும் எனது இந்த வார்த்தை உங்களின் ஆசனத்தை அவமதிப்பதாக இருந்தால் அதனை நான் வாபஸ் பெற்றுக் கொள்கிறேன். எனக்கு வறட்டு கௌரவம் கிடையாது" என்றார்.

இவ்வேளையில் கூறிய பிரதி சபாநாயகர், "எதிர்க்கட்சித் தலைவர் அதனை வாபஸ் பெற்றுக்கொள்வதாக கூறியதை நான் வரவேற்கின்றேன். இது தொடர்பில் சகல இலங்கையர்களும் பெருமை கொள்வர்" என்றார். (ம-7)


## லசந்த...

போராட்டம் ஒன்று முன்னெடுக்கப் பட்டுள்ளது.

சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு முன்னர் நேற்றுப் பிற்பகல் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. சட்டமா அதிபர் பதவி விலக வேண்டும் என்றும், லசந்த விக்ரமதுங்க கொலை வழக்கில் மூன்று முக்கிய சந்தேக நபர்களை விடுதலை செய்வதற்கான உத்தரவுகள் குறித்து வெளிப்படைத்தன்மை வேண்டும் என்றும் போராட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர். (ம-7)


# மரண அறிவித்தல்

மண்ணில் 12 - 08 - 1945



விண்ணில் 06 - 02 - 2025

## பாவிலுப்பிள்ளை சந்தியாப்பிள்ளை

(பருத்தித்துறை சிற்றி றேடர்ஸ் உரிமையாளர்)

பருத்தித்துறை தும்பளையைப் பிறப்பிடமாகவும் ஐயனார் கலட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட பாவிலுப்பிள்ளை சந்தியாப்பிள்ளை அவர்கள் நேற்று 06.02.2025 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாவிலுப்பிள்ளை - செபமாலையம்மா தம்பதியினரின் புதல்வரும் காலஞ்சென்றவர்களான வேலாயுதம் - இராஜேஸ்வரி தம்பதியினரின் பாசமிகு மருமகனும் இந்துமதியின் அன்புக் கணவரும் புஸ்பகாந்தி(அவுஸ்திரேலியா), சிறீகாந்(ஜெனீவா), தேனுகாந்தி(ஆசிரியர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற பற்றிமா சோதி மங்களம் மற்றும் லூர்து சேவியர், ஸ்ரீபன் ஜெயராசா, இமல்குலேட்டா ரஞ்சினி, மேரிறெயினா, மேரிகிறிஸ்ரி ஆகியோரின் சகோதரனும் கிருஸ்ணகுமாரி(சுவிஸ்), ரதி, ஜெயந்தி, வசந்தி, சாந்தகுமாரி(நோர்வே), லலிதகுமாரி ஆகியோரின் மைத்துனரும் ஜெயகீதன்(அவுஸ்திரேலியா), தர்ஷா(ஜெனீவா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ரங்கனா, சஞ்சய், ரித்தீஸ், திவ்வியன், கிருசன் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 07.02.2025 வெள்ளிக்கிழமை மு.ப 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு புனித தேவ மாதா கோவிலில் இறுதி ஆசீர்வாதத்துடன் தும்பளை சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

(817)



## வீட்டுடன் காணி விற்பனைக்கு

கல்வியங்காடு சந்தியிலிருந்து 100m தூரத்தில் றோட்டுக்கரை வீடும் காணியும் (1 பரப்பும் 2 ½ குளியும்) நல்ல தண்ணீர் கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :
077 229 4985
(3343)



## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS

எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம்
• சாவகச்சேரி • மானிப்பாய்
• நெல்லியடி • பருத்தித்துறை
• திருகோணமலை • வல்வெட்டித்துறை
• கோப்பாய் • புத்தூர்
• பண்டத்தரிப்பு • சங்கானை
• கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com
(C-2212)



## Vacancy

Peon/ Office Boy

A/L - 3 Pass கட்டாயம்
English pass, வயதெல்லை : 22 – 30
Three Wheeler ஓடத் தெரிந்த பணியாளர் விரும்பத்தக்கது. சுயவிபரக்கோவையினை 076 422 1761 என்ற Whatsapp ற்கு அனுப்பி வைக்கவும்
Happy Supermarket - உரும்பிராய்
(3337)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.181, [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.02.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org